# முரசொலி

வார இதழ்

ஆசிரியர்: மு.கருணாநிதி

முரசு 4 | 4-10-57 | வெள்ளி | ஒலி 24


## அமெரிக்காவில் புரட்டாசி சனிக் கிழமை!



# ★ ★ பெருகுது துரைத்தனத்தார் ஊழல்!
# ★ ★ வளருது வன்னெஞ்சர் செயல்!!

'இந்தியாவிற்கு விடுதலை' கிடைத்து ஆண்டுகள் பத்து ஆன பிறகும்; துண்டு விழுந்த வரவு செலவுக் கணக்கையும், தொடர்கதையாக வளர்ந்துள்ள நிர்வாக ஊழலையும், 'திரிசங்கு சொர்க்க'த்தில் நிற்கும் திட்டங்களையும், அவைகட்காக திருவோடேந்தி தேச சஞ்சாரம் செய்யும் பரதேசிக் கோலத்தையும்தான் நாட்டுக்குக் காட்டுகின்றார்கள். நிர்வாகத் துறைகளிலே ஏற்படுகின்ற ஊழல்களையெல்லாம் அவ்வப்பொழுது புள்ளி விபரங்களோடு எடுத்துக் காட்டி, போதிய சான்றுகளோடு விளக்கம் கூறி வந்திருக்கிறோம். எனினும் ஊழல் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர் பிறைபோல வளர்ந்து வருகிறதே தவிர குறையவில்லை. அண்மையில் வெளிவந்துள்ள ஒரு சில குறிப்புகள் ஆள்வோரின் நிர்வாகத் 'திறமைக்கு' நற் 'சான்றிதழ்' தருகின்றன.

ஆயுள் இன்சூரன்சுக் கழகங்களெல்லாம் 1955 முடிய தனிப்பட்டவர்களின் நிர்வாகத்தின் கீழேயே இருந்து வந்தன. அடுத்த ஆண்டிலிருந்து அரசாங்கம் இத்துறையில் பெருமளவிற்கு ஊதியம் கிடைப்பதை உணர்ந்து ஆயுள் இன்சூரன்சுக் கழகங்களை எல்லாம் தேசிய மயமாக்கின. ஆயுள் உறுதிப்பாடு அல்லது இன்சூரன்சு செய்பவர்களெல்லாம் தனிப்பட்டவர்களால் நடத்தப்படும் கழகங்களை நம்பி பணம் கட்டுவதற்குத் தயங்கியே நின்றனர். எனவே அரசாங்கம் இக் கழகங்களின் நிர்வாகங்களை மேற்கொண்டபொழுது அரசாங்கத்தில் முதலீடு செய்கிறோம் என்ற பெருமகிழ்ச்சியின் காரணத்தால், ஏற்கனவே ஏற்பட்டிருந்த அவ நம்பிக்கை நீக்கப்பட்டிருக்க வேண்டும். அதன் மூலம் அரசாங்கத்தின் கீழ் முதலீடும் பெருகியிருக்க வேண்டும். ஆனால் இத்துறை அரசாங்கத்தின் கீழ் வந்த பிறகு முதலீடு பெருகாததோடு மட்டுமல்ல; பெருமளவிற்குக் குறைந்திருக்கிறது.

1955-ல் தனிப்பட்டோர் நிர்வாகத்தின் கீழிருந்த ஆயுள் இன்சூரன்சுக் கழகங்களில் மொத்தம் செய்யப்பட்டிருந்த முதலீடு 268 கோடி ரூபாய். ஆனால் அரசாங்கத்தின் மேற்பார்வையில் வந்தபிறகு, 1955-ல் மொத்தம் செய்யப்பட்டிருந்த முதலீடு 200. கோடி ரூபாய் தான். சரியாக ஓராண்டுக்குள்ளாகவே 68 கோடி ரூபாய் முதலீட்டில் குறைந்துள்ளது. இதற்குக் காரணம் ஆள்வோரின் திறமையின்மையா? அல்லது, பொதுமக்கள் அரசின் மேல் கொண்டிருக்கும் அவநம்பிக்கையா?

பம்பாயில் தனிப்பட்டவர்கள் ஒருவரால் நடத்தப்பட்டு வந்த கம்பெனி ஒன்று கவிழ்ந்து விட்டது. 62 இலட்சத்து 49 ஆயிரத்து 700 ரூபாய் மோசடி செய்ததாக அதன் நிர்வாகிகள் சிலர் மீது வழக்கு போடப்பட்டுள்ளது. இந்த மோசடி வழக்கின் மூலம் குற்றவாளிக் கூண்டில் தாமோதர் சொரூப் என்ற ஒரு முன்னாள் பாராளு மன்ற உறுப்பினரும் நிறுத்தப்பட்டுள்ளார். அந்த முன்னாள் பாராளு மன்ற உறுப்பினர்க்கு வழக்கிலிருந்து விலக்கு அளிக்குமாறு பம்பாய் கவர்னர் திரு. பிரகாசா பண்டித நேருவை வேண்டியுள்ளாராம். சட்டத்தின் காவலனாக இருக்க வேண்டியவர் குற்றவாளிக்கு உற்ற துணையாக இருக்கின்ற வேடிக்கையை அண்மையில் விசாரணையின் போது வழக்கு மன்றம் சந்தித்திருக்கிறது. ஆம்; பாலுக்குக் காவலாக இருக்க வேண்டியவர் பூனைக்குத் தோழனாக இருக்கிறார்!

இது போலவே, வேலியே பயிரை மேயும் வேதனை நிறைந்த வேறொரு செய்தியையும் 'பிளிட்ஸ்' என்ற ஆங்கில வார இதழ் வெளியிட்டுள்ளது. வடநாட்டில் கொள்ளைக் கூட்டத்தாரும் கள்ளக் கடத்தல் செய்வோரும் பெருமளவிற்கு வளர்ந்திருக்கின்றனர். பாகிஸ்தானிலிருந்து பஞ்சாப் எல்லை வழியாக மட்டும் மாதம் ஒன்றுக்கு ஏறக் குறைய ஐந்து கோடி ரூபாய் பெறுமான தங்கம் கள்ளத்தனமாக இந்தியாவுக்குள் வந்து விடுகிறது.

இத்துறையில் ஈடுபட்டு நாட்டின் பொருளாதார நிலையைச் சீர்குலையவைக்கும் குற்றவாளிகளைக் கண்டு பிடித்து இது வரை அரசாங்கம் தண்டனை தந்ததில்லை. காரணம், ஆள்வோரின் திறமையின்மை என்பதைவிட, ஆள்வோர்க்கும் இக் கொள்ளைக் கூட்டத்தார்க்கும் இடையே உள்ள உறவும், கொண்டுள்ள குருதித் தொடர்புமேயாகும் என்று தெரிய வருகிறது.

கழிந்த பஞ்சாப் சட்ட சபையில் முதலமைச்சர் திரு. பிரதாப் சிங் கெய்ரான் என்பவர் மேல் இது சம்பந்தமாக சுயேச்சை அங்கத்தினர் ஒருவர் குற்றம் சாட்டிப் பேசியுள்ளார். அமைச்சருடைய மகன்களில் ஒருவரே நேரடியாக அந்த விவகாரங்களில் சம்மந்தப்பட்டிருப்பதாகக் குறிப்பிட்டார். அதன் பிறகு பஞ்சாப் நிர்வாகத்தில் அரசாங்கம் ஏற்படுத்திய சில மாறுதல்கள் பல புதிய சிக்கல்களையும் தொல்லைகளையும் தோற்றுவித்தன.

சென்ற ஜூலைத் திங்கள், 22-ம் நாள் 'கொள்ளைக் கூட்டத்தில் ஈடுபட்டுள்ள மந்திரியின் மகன் யார் என்று சொல்ல முடியுமா?' என்று பஞ்சாப் அரசாங்கம் ஒரு பத்திரிகை குறிப்பின் மூலம் சவால் விட்டுள்ளது. அந்த சவாலை ஏற்று பஞ்சாப் சோசியலிஸ்ட் கட்சியின் மாநில செயலாளர் திரு. அர்பஜன்சிங் என்பவர் செய்தி இதழ் மூலம்,

"திருட்டுத் தனமாக தங்கத்தைக் கடத்துபவர்களில் ஒருவர் சுரிந்தர் சிங். வேறு பல கொடுமைகட்கும் உடந்தையான இவர், முதலமைச்சரின் மகன் என்ற காரணத்தால் இதுவரைகுற்றங்களிலிருந்து மறைக்கப்பட்டு தண்டனையிலிருந்து தப்பி வருகிறார்," என்று அறிவித்துள்ளார்.

இந்த அறிக்கைக்கு அமைச்சரோ, அவர் தம் திருமகனோ எவ்வித சரியான பதிலும் தரவில்லை. வேலியே பயிரை மேயும் வேதனையான காட்சிகள் இந்தியத் துணைக் கண்டத்தில் வளருகின்றன. குடியாட்சிப் பண்பு கொலை செய்யப்படுகின்றது!

டில்லி அரசின் நேரடிப் பார்வையில் இருக்கும் புகைவண்டி போக்குவரத்துத் துறையிலும் ஏராளமான பணம் வீணாகிறது. தொடர்வண்டி மூலம் பொது மக்கள் அனுப்பித் தருகின்ற பொருட்கள் திருட்டுப் போகிற காரணத்தால் பொருட்களின் உரிமையாளர்க்கு ஆண்டு தோறும் அரசாங்கம் கூட்டிக் கொடுக்கும் நட்ட ஈடுத் தொகை மூன்று கோடி ரூபாய் என்று துணையமைச்சர் திரு. ஷாநவாஸ் கான் பாராளு மன்றத்தில் அறிவித்துள்ளார்.

தென்னிந்திய இரயில்வே பகுதியில் நடைபெற்ற ஒரு மராமத்து வேலையை ஏற்று நடத்திய காண்ட்ராக்டர் ஒருவருக்கு இரண்டு தடவை பணம் தந்திருக்கிறது அரசாங்கம். இதன் மூலம் போக்குவரத்துத் துறை ஒரு இலட்சத்து ஆறாயிரத்து எண்ணூற்று இருபத்தைந்து ரூபாய்களை இழந்திருக்கிறது என்று கணக்காய்வாளர்கள் தெரிவிக்கின்றனர்.

சோசியலிஸ்ட் கட்சித் தலைவரான டாக்டர் ராம் மனோகர் லோகியா சென்ற 14—9—57-ல் ஐதராபாத்தில் நடைபெற்ற அவர் கட்சியின் தனிப்பட்ட கூட்டம் ஒன்றில், இன்றைய அரசாங்கம் எந்த அளவிற்குப் பிற்போக்கான—ஊழல் மலிந்த நிலையில் பணியாற்றுகிறது என்பதைப் புள்ளி விபரங்களோடு விளக்கிக் காட்டியுள்ளார்.

- இந்தியாவையே கொள்ளையடித்து இங்கிலாந்தில் கொண்டு குவித்ததாகக் கூறப்பட்ட வெள்ளையர்கள் ஆட்சியின்போது ஏறத்தாழ 35,000 மைல் நீள இரயில் பாதை அமைக்க ரூ. 666 கோடிதான் செலவிடப்பட்டது. ஆனால் சென்ற பத்தாண்டு பாரத புத்திரர்கள் ஆட்சியில் சுமார் 600 மைல் நீள இரயில் பாதை அமைக்க 268 கோடி ரூபாய் செலவாகியுள்ளது:
- ஒவ்வொரு மைல் நீள இரயில் பாதை அமைக்கச் செலவு முன்னிலும் 20 மடங்கு அதிகரித்துள்ளதை இது காட்டும்.
- ஆனால் அதே நேரம் பொருட்களின் விலை நான்கு மடங்கிற்கு மேல் ஏறியிருக்கிறது. வெள்ளையராட்சிக் காலத்தில் 45 ரூபாய் செலவில் நீர்ப்பாசன வசதி செய்யப்பட்ட ஒரு ஏகர் நிலப் பரப்பிற்கு இப்பொழுது காங்கிரசார் ஆட்சிக் காலத்தில் ஏறத்தாழ 600 ரூபாய் செலவிடப்படுகிறது.

இந்தப் புள்ளி விபரங்களோடு திரு. லோகியா அவர்கள் ஐந்தாண்டுத் திட்டங்களை உருவாக்கிய அடிப்படையே தவறானது என்றும், ஊழல் நிறைந்த இந்த நிர்வாகத்தினரால் உருப்படியாக எதையும் செய்ய முடியாது

[தொடர்ச்சி பக்கம்—8]

## அக்டோபர்-13
## இந்தி எதிர்ப்பு நாள்
★
### நாடெங்கும் கொண்டாடுக!

இந்தியப் பேரரசு தென்னகத்தின்மீது இந்தியைத் திணிக்கும் அநீதியை எதிர்த்து, 1957, அக்டோபர்-13, ஞாயிற்றுக்கிழமையை 'இந்தி எதிர்ப்பு நாளா'கக் கொண்டாடுமாறு தி. மு. கழகக் கிளைகளையும், துணை அமைப்புகளையும், தென்னாட்டின் நலனிலும்-திராவிட மொழிகளின் நலனிலும் அக்கறை கொண்ட பிற அமைப்புகளையும் வேண்டிக் கேட்டுக் கொள்ளுகிறோம்.

அன்று இந்தி எதிர்ப்பு ஊர்வலங்கள்—பொதுக் கூட்டங்கள் ஆகியவற்றை மிகச் சிறப்பாக நடத்துவதோடு, இந்தியை எதிர்க்கும் தீர்மானத்தை நிறைவேற்றி, அதன் ஒரு படியை இந்தியப் பேரரசின் உள் நாட்டமைச்சருக்கும், மற்றொரு படியை மாநில அரசியலாருக்கும், வேறொரு படியைத் தலைமைக் கழகத்திற்கும் அனுப்பி வைக்க வேண்டுகிறோம்.

அமைதிக்குக் கேடு விளையாத வகையில் கண்ணியத்தோடும், கட்டுப்பாட்டோடும் கடமையாற்ற வேண்டுகிறோம்.

-இரா. நெடுஞ்செழியன்
பொதுச் செயலாளர் [தி. மு. க.]




வெள்ளி 4—10—57 சென்னை

# 'வால் போச்சு - கத்தி வந்தது!'

அநீதியையும் அக்ரமத்தையும் தாங்கிக் கோள்வதற்காகவே தோன்றிய இனம் தமிழினம்!

இலங்கையிலே உதை! இதர வெளி நாடுகளிலே விரட்டல்!—இதேல்லாம் கிடக்கட்டும் என்று உள்நாட்டு நிலைமைகளை ஆராய்ந்தாலோ ஒட்டு மோத்தக் கூட்டாக தமிழினம் தற்கொலை செய்து கோள்ளவேண்டிய நிலையிலேதான் அவலம் உச்ச கட்டத்திலிருக்கிறது!

சிறந்த இனமேன்று அவனைக் குறித்துக் காட்டும் சிறப்பியல்புகள் அனைத்தும் சிறு நரிக் கோள்கையினரால் சீரழிக்கப்படுகின்றன.

விழியினும் உயர்ந்ததாக அவன் மதித்திருக்கும் மொழியைக் குழி தோண்டிப் புதைக்க சழக்கர்களின் திட்டம் அமுலாக்கப்படும் நிலையிலிருக்கிறது!

நூற்றுண்டுக் காலமாக அவன் கட்டிக் காத்துவந்த மருத்துவம் உதாசீனப்படுத்தப்படுகிறது!

—இதே நிலைதான் அவனது எல்லையைப் பொறுத்தவரையிலும் அன்னியர் அதிகாரம் மேலோங்கியிருப்பதாலும்; அவருக்கு அடி பணிந்து போற்றிப் பாடும் விபீஷணர் கும்பல் அதிகரித்துவிட்டதாலும் நீடித்துவருகிறது!

இப்போதுதான் தமிழன் வளம் கொழிக்கும் தேவிகுளம்-பீர்மேடு பகுதிகளை இழந்தோம்!

அந்த இழப்பினுல் ஏற்பட்ட துக்கம் மறையாததற்கு முன்னரே இப்போது மீண்டுமோரு பேரிடி தமிழினத்தைத் தாக்கியிருக்கிறது!

தமிழருக்கு ஓரவஞ்சகம் செய்யும் வகையிலே வரையப்பட்ட படாஸ்கர் தீர்ப்பு அப்படியே அமுலாக்கப்பட இருக்கிறதாம்!

அதன்படியே திருத்தணி தமிழ் நாட்டோடு இணைந்திருப்பது உறுதி செய்யப்பட்டபோதிலும்; ஆரணியாறு திட்டம் (ஹெட் ஒர்க்ஸ்) உள்பட பொன்னேரி, திருவள்ளூர் தாலுக்காக்களில் **310** சதுர மைல் பிராந்தியம் ஆந்திராவுக்கு மாற்றப்படுகிறதாம்!

ஆனால் அதற்கு இணையாக **310** சதுர மைல் ஆந்திராவிலிருந்து சென்னைக்குக் கிடைக்கிறது-என்று சந்தோஷப்படச் சோல்கிறார், படாஸ்கர்!

**310**-சதுர மைல் கொடுக்கப்படுகிறது!

அதற்குப் பதில் வேறு **310** சதுர மைல் திருப்பி வாங்கப்படுகிறது!

ஆகவே யாருக்கும் லாபமோ நஷ்டமோ கிடையாது!

—என்று நினைத்து படாஸ்கரின் நுண்ணறிவையும், பாரபட்சமற்ற தன்மையையும், அதை மாற்றாமல் திருத்தாமல் அப்படியே ஒப்புக்கோண்ட காமராசரது பெருந்தன்மையையும், பரந்த நோக்கத்தையும் பாராட்டிப் போற்றிப் புகழ்பவர்களும் இருக்கத்தான் செய்கிறார்கள்!

**310**-சதுர மைலுக்குப் பதிலாக வேறு **310**-சதுர மைல்—கணக்கு சரிதான்! ஆனால் இது பிணக்கு தீர்ப்பதாக இல்லையே!

திருத்தணி தமிழகத்திற்குத்தான் என்பது உறுதி செய்யப்பட்டது.

ஆனால் அதைச் சார்ந்த **310**-சதுர மைல் பரப்பளவை ஆந்திரா இழந்ததால் அதே அளவு பரப்பளவை சென்னையும் இழக்கவேண்டுமென்பதிலே என்ன நியாயம் இருக்கமுடியும்?

தனக்கு ஒரு கண் பழுதாகிவிட்டது என்பதற்காக எதிர்த்த வீட்டுக்காரனுக்கும் ஒரு கண் பழுதாகவேண்டும் என்று நினைப்பதா நீதி—நியாயம்—நேர்மை?

—ஆனால் ஆய்ந்து பார்த்தால், படாஸ்கரின் முடிவு இந்த உவ...

இது சம்மந்தமாக இறுதி முடிவு காண ஹைதராபாத்திலே காமராசர் ஆந்திர முதலமைச்சர் சஞ்சீவ ரேட்டியாரைச் சந்தித்துப் பல நிமிடங்கள் உரையாடியிருக்கிறார்.

காமராசர் சஞ்சீவியாரைப் பல நிமிடங்கள் சந்தித்துப் பேசினாரே; அதன் பலன் என்ன? அதனால் என்னென்ன திருத்தங்கள் ஏற்றுக் கோள்ளப்பட்டிருக்கின்றன?

எதுவுமில்லை. அப்படியே படாஸ்கர் வழங்கிய தீர்ப்புகளை ஒப்புக் கோள்வதற்குத்தான் பாவம்; காமராசர் பல நிமிட நேரம் சேர்ந்தாற் போல் பேச்சு வார்த்தைகள் நடத்தினாராம்!

இப்படி வழக்கம்போல் 'சீரி' என்று தலையாட்டுவதற்குத்தான்—காமராசர் என்ன செய்வாரோ ; ஆரணியாறு திட்டத்திற்குப் போராடுவதற்குத்தான் தயார் செய்துகோண்டிருக்கிறாரோ—என்றெல்லாம் எண்ணி தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து ஒப்புக்கோள்ளப்பட்ட இந்த நாள்வரை பொதுமக்களை எண்ணி ஏங்க வைத்திருக்கிறார், அவர்!

பாவம்; வடக்கிலிருந்து வரும் உத்தரவுகளுக்கெல்லாம் தலையசைத்துப் பழக்கப்பட்டுவிட்டது அவரது சிரம்! அதனால்தான் போலும் ஆரணியாறுத் திட்டத்தைப் பறி கோடுத்துவிட்டபோதிலும் சிறிதும் அதற்கான பதட்டம் இன்றி தமிழுணர்வு அற்றுத் திரும்பியிருக்கிறார், "பச்சைத் தமிழர்"!

இதுபற்றிக் கழகம் தனது கருத்தினைத் தேளிவுற அறிவித்திருக்கிறது. திருவண்ணாமலையில் நாம் நிறைவேற்றிய தீர்மானம் குறிப்பிடுகிறது:

*"படாஸ்கர் தீர்ப்பு மக்களுக்குத் தெளிவாக இதுவரை அறிவிக்கப்படாதிருக்கிற வருந்தத்தக்க நிலையில், ஓரளவு தெரிவிக்கப்பட்டுவரும் தகவல்களிலிருந்து தமிழ்நாட்டுக்குத் திருத்தணியும் அதை ஒட்டிய சில கிராமங்களும் கிடைக்க இருக்கிறது என்று அறிந்து இம்மகாநாடு மகிழ்ச்சியுடன் வரவேற்கிறது.*

*"அதேபோது எற்கனவே தமிழ்நாட்டுடன் பல்வேறு வகையாலும் தொடர்புகொண்டு இணைந்து வாழ்ந்துவரும் சில பகுதிகளில் வளமிக்க இடங்களும், செல்வக் காடுகளும், நீர்ப் பாசன வசதிகளும், ஆரணியாறு தேக்கத் திட்டப் பகுதியும், படாஸ்கர் தீர்ப்புப்படி அங்கு வாழும் மக்களுடைய விருப்பத்திற்கு எதிராக தமிழ்நாட்டிலிருந்து வெட்டி எடுக்கப்பட்டு, ஆந்திரத்திற்கு அளிக்கப்பட இருப்பதறிந்து இம்மகாநாடு வருந்துகிறது. சென்னை அரசு, தொடர்ந்து தமிழ்நாட்டுக்கு உரிமையுள்ள இடங்களை இழந்துவருவது கண்டு வருந்துவதுடன், தமிழரின் உரிமைகளைப் பாதுகாத்திடத் தவறிவரும் சென்னை அரசினரின் போக்கை வன்மையாகக் கண்டிக்கிறது.*

*"படாஸ்கர் அறிக்கையின் அடிப்படையில் திருத்தணிப் பகுதியைப் பெற்றுக்கொண்டு, அதே நேரத்தில் தமிழ்நாட்டிலிருந்து வேறு பகுதிகளை வெட்டாமலிருக்கும் முறையிலும், உரிமையை நிலைநாட்டத்தக்க வகையிலும், மக்களின் கருத்தை அறிந்து அதற்கேற்றபடி நடவடிக்கையில் ஈடுபடுமாறு சென்னை அரசினரை இம்மாநாடு வலியுறுத்திக் கேட்டுக் கொள்கிறது."*

—**310** சதுர மைலுக்கு **310**-சதுர மைல் என்பதல்ல பிரச்னை. ஆரணியாறு திட்டத்தால் பெரிதும் பயனடையும் அதிகப்படியான கிராமங்கள் தமிழகத்தைச் சார்ந்தவை.

'வால் போச்சு ;கத்தி வந்தது; டம், டம், டம்' என்பதுபோல 'பொன்னேரி, திருவள்ளூர் பகுதிகள் போயின; திருத்தணி வந்தது' என்றுதான் தம்பட்டம் போட்டுத் திரிகின்றனர், துரைத்தனத்தார்!

ஆனால் உண்மைத் தமிழ் மகன் அப்படி நினைக்கமாட்டான். திருத்தணியும் தமிழனுடையதே! ஆரணியாறுத் திட்டமும் தமிழ் நிலத்துக்குத்தான் சேரவேண்டும்!

—இதை உணராதவர்கள் தமிழுணர்ச்சி இல்லாதவர்களாகத்தான் இருக்கமுடியும்!

## மாநில கவர்னர் ஜான் மறைவு

*தமிழ் மாநில கவர்னர் திரு. ஏ. ஜே. ஜான் அவர்கள் 30-9-57 அன்று திடீரென இயற்கை எய்தினார் என்ற செய்தி அறிவிக்க மிக வருந்துகிறோம்.*

*கடந்த சில நாட்களாக கவர்னர், மருத்துவ மனையில் தங்கி சிகிச்சை பெற்று வந்தார். கடந்த செப்டம்பர் 22-ந்தேதியன்று அவருக்கு அறுவை சிகிச்சை யளிக்கப்பட்டது. அன்று முதல், உடல் தேறிவருவதாக டாக்டர்கள் அறிவித்துவந்தனர். ஆனால், திடீரென காய்ச்சல் அதிகரித்து அவர் உயிர் துறந்தார்.*

*திரு. பிரகாசாவிற்குப் பிறகு கடந்த 1956 டிசம்பர் 10-ந்தேதியன்று ஜான் மாநிலத்தின் கவர்னராகப் பதவி ஏற்றார்.*

*அவரது பிரிவால் வாடும் அவரது துணைவியார், மற்றும் உறவினர்களின் துக்கத்தில் நாமும் பங்கு கொள்கிறோம்; அவர்களுக்கு நமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.*

**தேவை; தேவை!**
**உடனே தேவை!!**

காந்தியார் மறைந்தபோது நாட்டுக்குக் காந்தி ராஜ்யம், மதத்திற்கு காந்தி மதம் எனப் பெயர் சூட்டச் சொல்லி பெரியார் விடுத்த அறிக்கைகள் கொண்ட 'விடுதலை' இதழின் பழைய 'பைல்'கள் இருந்தால் உடன் அனுப்பி உதவ வேண்டுகிறோம்.

**கற்பனை உரையாடல்**

# பொருளாதார வகுப்பறையிலே...

[ஓர் அரசினர் கல்லூரியில் பொருளாதார வகுப்பு நடை பெற்றுக் கொண்டிருக்கிறது.]

பொருளாதார ஆசிரியர்: கடன் பட்டார் நெஞ்சம்போல் கலங்கினன் இலங்கை வேந்தன்—என்ற அடிகளை நீங்கள் அடிக்கடி கேள்விப்பட்டிருக்கலாம். எனவே ஒரு நாடுகூட, மற்றொரு நாட்டிடம் கடன் வாங்குவது அவ்வளவு நல்லதல்ல!

கல்லூரி மாணவன்: நம், நாடு எவ்வளவோ கடன் வாங்கியிருக்கிறதே! ஏராளமான திட்டங்களை வடநாட்டிலே நிறைவேற்ற வேண்டுமானால் ஏழ்மையான இந்தியா கடன் வாங்கித்தானே ஆக வேண்டும்!

ஆசிரியர்: வருவாய்க்குத் தகுந்த திட்டங்களைத் தீட்ட வேண்டுமே யல்லாது, ஏராளமான திட்டங்களைத் தீட்டிக் காட்டி, தேர்தலிலே ஜெயித்துவிட்டுப் பதவிக்கு வந்தவுடன் "பணம் இல்லையே! என்ன செய்வோம்?" என்று முதலைக் கண்ணீர் சொரிவதால் என்ன பயன்? 'எல்லையின்றி கடன் வாங்கி அதிகமாக செலவு செய்தால், பின்பு, 'மானம் அழிந்து, மதிகெட்டு, எல்லோர்க்கும் கள்வனாய், ஏழ் பிறப்பும் தீயனாய்...... வாழ வேண்டி வரும்!

மாணவன்: அப்படியானால் கடன் கொடுப்பது மட்டும் நல்லதா சார்?

ஆசிரியர்: "கடன்காரனாகவும் வாழாதே! கடன் கொடுப்பவனாகவும் இருக்காதே!" என்ற ஷேக்ஸ்பியர் பொன்மொழியை நீ கேள்விப்பட்டதில்லையா?

ஒரு மாணவி: நம் நிதி மந்திரி டி. டி. கே.யும் அமெரிக்காவுக்குக் கடன் வாங்கத்தானே சென்றிருக்கிறார்!

மாணவன்: (குறுக்கிட்டு) இல்லையே! யார் கூறியது? உதவி பெறுவதற்காகவன்றோ சென்றிருக்கிறார்!

மாணவி: உதவி என்றால்......?

மாணவன்: திருப்பித் தராத கடன்!

[மாணவர்கள் யாவரும் சிரிக்கிறார்கள்.]

மாணவி: ஏன் அப்படியெல்லாம் கூற வேண்டும்? பிச்சையெடுக்கப் போயிருக்கிறாரென்று பச்சையாகக் கூறலாமே! [மறுபடியும் ஒரே சிரிப்பு!]

மற்றொரு மாணவி: நாட்டைப் பற்றி அவர்களுக்கென்ன கவலை? மேனன் கூடத்தான் அமெரிக்கா சென்றிருக்கிறார்! ஏதாவது காரணம் கூறிக் கொண்டு அமெரிக்காவைச் சுற்றிப் பார்க்க சென்றிருக்கிறார்கள்!

ஆசிரியர்: போதும்! விவாதம் போதும்! நம் பாடத்திற்கு வருவோம்!

மாணவன்: சார்! ஒரு சிறு ஐயம்!..."ஏற்பது இகழ்ச்சி" என்பது நாட்டிற்கும் பொருந்துமல்லவா?

மாணவி: அதுவும் பொய் கூறி பிச்சையெடுத்தல் மிக மிக இழிவானதல்லவா?

ஆசிரியர்: இது என்ன வகுப்பு தானே?

மாணவர்கள்: ஆமாம்; ஆமாம்!

ஆசிரியர்: இல்லை! தவறிப் போய் நான் லோக சபைக்குள் புகுந்து விட்டேனோ எனப் பயந்து போய்விட்டேன்!

மாணவர்கள்: பயப்படாதீர்கள்! அஞ்சற்க! [ஒரே சிரிப்பு]

ஆசிரியர்: [மாணவியை நோக்கி] அம்மா! அப்படியென்ன டி. டி. கே. பொய் கூறி பிச்சை கேட்டார்?

மாணவி: கம்யூனிசத்தை ஒழிக்கப் போவதாகக் கூறியா கைக்கூலி கேட்பது?

மாணவன்: அவர் கம்யூனிசத்தை விரட்டாவிட்டாலும், இந்தியாவில் முதலாளித்துவத்தை வளர்த்து விடுவாரென்பதில் ஐயமில்லை! எத்தனை பெரிய பெரிய முதலாளிகள் அவரால் 'பண முதலை'களாக்கப் பட்டிருக்கிறார்கள் தெரியுமா? இல்லாவிட்டால்... இந்தப் பண முதலைகள் அவரை மந்திரியாக்க அரும்பாடு பட்டிருப்பார்களா என்ன?

மற்றொரு மாணவன்: அந்தப் பண முதலைகளை மேலும் மேலும் கொழுக்க வைக்கத்தான் இப்பொழுது பிளேட், கெடிகாரம், சைக்கிள் போன்ற மிகமிக அவசியமான வெளிநாட்டுப் பொருள்களின் மீது தடை விதித்திருக்கிறார்கள்! இவர்களெல்லாம் முதலாளிகளின் அடிவருடிகள் தானே! வடநாட்டு முதலாளிகளை மேலும்மேலும் கொழுக்க வைக்கவும், வட நாட்டிலே ஏராளமான தொழிற்சாலைகளை ஏற்படுத்தவும்தான் இப்பொழுது, 'பிச்சையிட்டுண்டு வாழ்ந்த நாட்டின் பிரதிநிதி'யாக 'ஏற்பது இகழ்ச்சி' என்பதை மறந்து, காவி உடை தரித்து, கமண்டலமேந்தி, பிச்சைப் பாத்திரத்துடன், டி. டி. கே. அமெரிக்காவுக்குச் சென்றிருக்கிறார். அவருக்கு ஒத்து ஊத—பாதுகாப்பளிக்க அவர் பின்னலேயே மேனனும் சென்றிருக்கிறார்!

ஆசிரியர்: முடிந்ததா உன் மேடைப் பிரசங்கம்? வெளிநாட்டுப் பொருள்களுக்குத் தடை விதிப்பதின் மூலம் உள்நாட்டுத் தொழிலை வளர்க்க முடியுமென நான் முன்பே கூறவில்லையா?

மாணவி: அது சரிதான் சார்! இவர்கள் வெளிநாட்டுப் பொருளையும் வரவிடமாட்டார்கள்! உள்நாட்டுத் தொழிலையும் வளர விடமாட்டார்கள்! தானே க்ஷவரம் செய்யும் கருவியைக் கண்டுபிடித்த ஜி. டி. நாயுடுவுக்கு இவர்கள் ஆதரவு தந்தார்களா? ஏன் தெரியுமா? அவர் ஒரு தென்னிந்தியர்! வட நாட்டுக்காகக் கடன் வாங்கி, தென்னாட்டைக் கடன்கார நாடாக்குகிறார்கள்! ஏராளமான வரி விதித்து, அந்த வரிப் பணத்தைக் கொண்டு வடநாட்டை வாழவைத்து, தென்னாட்டை ஏழ்மையாய்த்தவிக்கவிடுகிறார்கள்! தென்னாட்டுத் தொழில் நிபுணர்களை முன்னேற விடாமல் முட்டுக்கட்டை போட்டு விட்டார்கள்! கடைசியில் வெளிநாட்டுப் பொருளையும் இங்கு வரவிடாமல் தடுத்து, வடநாட்டு முதலாளிகளை மேலும் கொழுக்க வைக்க நினைக்கிறார்கள்! ஐயகோ! இவர்கள் தொல்லைகளுக்கு எல்லையே கிடையாதா?

மாணவன்: உண்டு! விரைவில் காலம் மாறத்தான் போகிறது! பிரஞ்சு நாட்டினரைப் போல நம் எம். பி.க்களும் ஒன்று சேர்ந்து இந்த மந்திரிகளைப் பதவியிலிருந்து நீக்கிச் சிறிது ஓய்வு கொடுத்தாலல்லவா இவர்களுக்கு 'சுயபுத்தி' வரும்!

[இவ்வளவையும் வெளியிலே நின்று கேட்டுக் கொண்டிருந்த டைரக்டரும் பிரின்சிபாலும் திடீரென்று உள்ளே நுழைகிறார்கள்.]

டைரக்டர்: நன்றாக இருக்கிறதே நீங்கள் பாடம் சொல்லிக் கொடுக்கும் இலட்சணம்! புரொபசர்! உங்களை வேலையிலிருந்து நீக்கியிருக்கிறேன்!

[இதைக்கேட்ட புரொபசர் மயக்கமுற்று விழுகிறார்! மாணவ மாணவிகள், "முடியாது! புரொபசரை வேலையிலிருந்து நீக்காதே!" எனச் சத்தம் போடுகிறார்கள்!]

—"இன்பபுரியான்"

**விற்பனையாகின்றன!**

★ அழகிய
★ திருந்திய
★ **இரண்டாம் பதிப்பு!**

மாறன் எம். ஏ. எழுதிய
**ஏன் வேண்டும் இன்பத் திராவிடம்?**
விலை ரூ. 1—50

★

ஆழ்ந்த கருத்தும் அழகு நடையும் கொண்ட கவினுறும் கதைக் கொத்து!
பி. சி. கணேசன் பி. எஸ்ஸி., பி. டி. தீட்டிய
**அபிசீனிய அடிமை**

[தனிப் பிரதி வேண்டுவோர் புத்தக விலையுடன் அணா நான்கு சேர்த்து அனுப்பவும்.]

கிடைக்குமிடம்:—
முத்துவேல் பதிப்பகம்.
77, மதுரை ரோடு, : : : திருச்சி—8.

## சென்ற இதழ்களில்...

- வரலாற்றுப் புகழ் பெற்ற ஆண்டு 1024...
- இந்து மதத்தின் இதயமும்—சனாதனத் தர்மத்தின் இரும்புக் கோட்டையும்—சிலை வழிபாட்டைச் சீராட்டிப்பாராட்டி வளர்க்கும் தொட்டிலுமாகிய சோமநாதபுரத்து ஆலயத்தைத் தகர்த் தெறிய கோட்டைக்கு வெளியே முகாமமைத்திருக்கிறான் கஜினி முகம்மது...
- ஒரு நாள் காலை—கடலாடச் சென்ற இந்துப் பெண் புவனேஸ்வரியின் குழந்தையை ஓநாயின் வாயிலிருந்து மீட்கிறான், முகம்மதியன் ஒருவனால் தன மகவு காப்பாற்றப்பட்டதை விரும்பாத அவளது கணவன் குழந்தையைப் 'பாபமூட்டை' என்கிறான். அவனோ க்ஷயம் பிடித்து சாவோடு போராடிக்கொண்டிருப்பவன்! புவனாவைச் சந்தித்தது முதல் அவளையே நாடுகிறது, கஜினியின் உள்ளம்...
- மறுநாள் காலை—சரித்திரப் பேராசிரியனும் தன் அந்தரங்கக் காரியதரிசியுமான 'உட்பி'யை அழைத்துக் கொண்டு பாழடைந்த ரகசியக் குகை ஒன்றுக்குள் செல்கிறான் கஜினி! அங்கே ஒளித்து வைக்கப்பட்டிருக்கும் ஓலைச் சுவடிகளையும், கோட்டைக்குச் செல்லும் ரகசிய வழியையும் காணுகின்றனர்...

கணவனின் உடல் நிலை கவலைக்கிடமான கட்டத்தை அடைந்து வருவதை புவனா நன்றாக அறிந்திருந்தாள். பாயோடு பாயாகப் படுத்துக் கிடக்கும் அந்த எலும்புருவைப் பார்க்கும் போதெல்லாம், அவள் மனம் சொல்ல முடியாத வேதனையை அடையும். அவனுடைய வாழ்நாள் உண்மையிலேயே நாட்கணக்கில் அருகிவிட்டதோ என்பதை எண்ணும்போது பயங்கரமான கற்பனைகள் தோன்றி அவளைச் சித்திரவதை செய்தன. வாழ்க்கையின் விளிம்பைக்கூடச் சரியாகச் சுவைத்தறியாதவள்; அரும்பு மலருமுன் கடுங்கோடை அதைக் கருக்கிவிட்டால்...?

புவனாவின் கண்முன் அவளுடைய எதிர் காலம் விரியத் தொடங்கியது. துரதிர்ஷ்டவசமாகக் கணவன் கண் மூடிவிட்டால்......அவளுடைய மஞ்சள் மறையும்......நிலா முகத்திற்கு அழகு சேர்க்கும் குங்குமம் அழியும்...மலர் முடிக்க அவள் அருகதையற்றவளாகிவிடுவாள்! சுருங்கச் சொன்னால் அவள் பாடாத தேனீ! உலவாத் தென்றல்! நரம்பு அறுந்த யாழ்! வேரிற் பழுத்தும் கோரிக்கையற்ற பலாப் பழமாகிவிடுவாள்! அதுமட்டுமா? மதானுஷ்டானங்கள் என்னவது? கணவன் இறந்த பின் கைம்பெண்ணாகக்கூட அவள் வாழ இந்து மதம் அனுமதிக்காதே! கணவனின் நிழல்தானே மனைவி? உருவம் மறைந்தபின் நிழல் மட்டும் எப்படி உலவ முடியும்? கணவன் கைலாயம் போய் சோமநாதரின் பாதார விந்தங்களில் ஐக்கியமானபின், மனைவி மட்டும் பூலோகத்தின் ஆசாபாசங்களுக்கு ஆட்பட்டு வாழ்வதை அனுமதிக்க இந்து மதம் என்ன ஏமாளி மதமா? ஆகவே கணவன் இறந்தபின் சோமநாதபுரத்தின் புனித மண்ணில் ...வளை கைம் பெண்ணாகக்கூட ...ம இந்து சனாதன தர்மம் ...திக்காது. கணவனின் பிரேதத்தைச் சாம்பலாக்கும் நெருப்பின் செந்நிற நாக்கு, சாஸ்திரப் பூர்வமாக அவளையும் தீண்டிச் சாம்பலாக்கும்; பட்டு போன்ற அந்த இளம் மேனியைத் தொட்டுச் சுவைக்கும் உரிமையை ஸ்ரீமந் அக்னி பகவான் ஏகபோகமாக அனுபவிப்பான்! ஆம்; கணவன் இறந்தால், இந்து தர்ம சட்டப்படி புவனா 'உடன்கட்டை' ஏறவேண்டும்; கரு நிறக் கூந்தலும், காதலூட்டும் கண்களும், பழ ரச உதடுகளும், பருவ வாளிப்பான அந்த மேனியும் — உயிருடன் பொசுக்கப்படும்...

எண்ணிப் பார்த்தாள் புவனா. கணவனோடு உடன் கட்டை ஏறுவதில், இந்து தர்ம நியதியை அனுஷ்டிப்பதில், அவளுக்கொன்றும் தடையில்லை. ஆனால், அந்தப் பச்சிளங் குழந்தை......தாய் தந்தையற்ற அந்த அனாதைக் குழந்தையை யார் பராமரிப்பது? அதன் எதிர் காலம் என்னவது? வாழ்க்கைப் பூங்காவில் இன்ப மலர்கள் கொய்ய வேண்டிய பருவத்தில், எரிந்து சாம்பலான எலும்புத் துண்டுகளை அல்லவா அவள் எண்ணும்படியாக ஆண்டவன் அவள் தலையில் எழுதி விட்டான்!

'லொக், லொக்'கென்ற கணவனின் இருமல் ஒலி கேட்டு புவனா சுய நினைவை அடைந்தாள். கணவன் இறக்கவில்லை; உயிரோடு இருக்கிறான் என்ற உண்மை அவளுடைய மனதிற்குப் புதுத் தெம்பை உண்டாக்கியது. புவனா எழுந்தாள். ஆக வேண்டிய வேலைகள் எவ்வளவோ பாக்கியிருந்தன. வேலையில் ஈடுபட்டாள்.

அந்தச் சமயம் வழக்கம்போல் வைத்தியன் கலயத்தில் ஒரு மண்டலம் மருந்தை எடுத்துக் கொண்டு வந்து சேர்ந்தான். நேராக புவனாவின் கணவன் படுத்திருக்கும் கட்டிலண்டை சென்று மூலிகைச் சருகுகளால் புகை மூட்டம் போட்டான். வீடு முழுவதும் புகை பரவி மூச்சுத் திணற வைத்தது. நெடி தாங்க முடியாமல் நோயாளியின் கண்ணிலும், மூக்கிலும் நீர் வடிய அவன் பிராணாவஸ்தைப்பட்டான். புகைச்சல் நின்றவுடன் வைத்தியன் நோயாளியின் நாடி பார்த்தான். ஆவல் அதிகரிக்க புவனா வைத்தியனின் முகத்தையே கூர்ந்து நோக்கிக்கொண்டிருந்தாள். அவன் வாயிலிருந்து வரப்போகும் சொல்லில் தான் அவளுடைய எதிர்காலமே தொக்கி நின்றது. பரிசோதனை முடிந்தவுடன், வைத்தியனின் முகத்தில் நம்பிக்கைக் குறி தென்படவில்லை. புவனாவின் உள்ளம் அதைப் பார்த்துச் சொல்ல முடியாத வேதனையடைந்தது.

கணவனின் உடல் நிலையைப் பற்றி அறிந்து கொள்ள அவள் துடித்தாள். ஆனால் அதைப் பற்றி அவள் கேட்க விரும்பிய கேள்வி வார்த்தைகளாக வெளி வராமல் தொண்டையிலேயே தேங்கி நின்றன. ஒரு வேளை; வைத்தியன் பாதகமான பதிலைச் சொல்லி விட்டால்?

"அம்மா, மருந்துகள் இனி உன் கணவனைக் காப்பாற்ற முடியாது...உடனே கோவிலுக்குப் போ! சோமேஸ்வரன் சன்னிதானத்தில் சாஷ்டாங்கமாக நமஸ்காரம் செய்து, உன் கணவன் உயிர் பிழைக்க வேண்டுமென்று பிரார்த்தனை செய்து கொள்...இனிமேல் பிரார்த்தனை ஒன்றுதான்— சோமேஸ்வரரின் அனுக்கிரகம் மட்டும்தான்-உன் கணவனைக் காப்பாற்ற முடியும்!"—மனிதப் பிரயத்தனத்தின் பயனற்றத் தன்மையையும் தெய்வ சங்கல்பத்தின் உறுதிப்பாட்டையும் நாசூக்காகச்சொன்னான் வைத்தியன்.

புவனா பதில் பேசவில்லை; அவளுடைய கண்களில் கண்ணீர் பெருக்கெடுத்தது! இனி, வாழ்க்கையில் அவளுடையஒரே நம்பிக்கை சோமநாதர்தான்! அந்தக் கல்லுருவை அவளுடைய கண்ணீர் கரைக்க வேண்டும். தெய்வாதீனமான செயல் மட்டுமேதான் அவளுடைய கணவனைக் காப்பாற்ற முடியும். எவ்வளவு பயங்கரமான உண்மை! கடவுள் உண்மையிலேயே அவள்மீது இரக்கம் காட்டுவாரா? இதுவரையில் தெய்வத்துக்கு விரோதமான செயலை மனமறிந்த வரையில் அவள் செய்ததில்லை. ஒருவேளை; அவளறியாமல் எதாவது பிழைகள் நிகழ்ந்திருந்தால்......?

5

திடீரென்று, முகம்மதிய வீரன் குழந்தையைக் காப்பாற்றியது அவள் நினைவுக்கு வந்தது. ஐயோ, என்ன அபசாரம் நிகழ்ந்து விட்டது! பாழாய்ப்போன அந்த ...ய் குழந்தையைத் தூக்கிச் செல்லாமல் இருந்திருந்தால்...? ஒரு வேளை; நீசன் ஒருவன் குழந்தையைக் காப்பாற்றியதால் சோமநாதர் கோபங்கொண்டு பழி வாங்கும் உணர்ச்சியில் கணவனின் உயிரைத் தட்டிப் பறிக்கப் பார்க்கிறாரோ........அப்படியிருந்தால் குழந்தை உண்மையிலேயே பாபமூட்டைதான்... கணவனையிழக்கும் துயரத்தில் ஒரு கணம் தாய்மையுணர்ச்சியையும் மறந்தாள். வேகமாகத் தொட்டிலருகில்போய் குழந்தையின் கழுத்தில் கை வைத்தாள்.

"சிசுஹத்தி, சிசுஹத்தி!" என்ற குரல் கேட்டுத் திரும்பிப் பார்த்தாள்.

வழுக்கைத் தலையும். வஞ்சகமே உருவான கண்களும் கொண்டு, மேனியிலே திருநீறு விளங்க, சோமநாதர் ஆலயத்தின் பிரதம புரோகிதன் நின்று கொண்டிருந்தான்.

சோமநாதர் ஆலயத்தின் பிரதம புரோகிதன் என்றால் என்ன சாமான்யமா? இந்து மதத்தின், சனாதன முறையின் பாதுகாவலன் அவன்! ஆட்சியாளருக்கில்லாத அதிகாரங்களும், ஆண்டவனுக்கே உரிய மரியாதைகளும் அவனுக்கு உண்டு. அதிலும் இந்தப் புரோகிதன் வைதீகத்தின் வைரம் பாய்ந்த கட்டை. முதுமையின் ஆக்ரமிப்பைக் காட்டும் வழுக்கைத் தலை, வயோதிகத்தின் கீறல் தென்படும் மேட்டு நெற்றி, அடிக்கடி உயர்ந்து தாழும் புருவங்கள், ஒளியிழந்த—குழி விழுந்த கண்கள், நீண்ட கூரிய மூக்கு, உறுதியும் வஞ்சனையும்காட்டும் மடிந்த உதடுகள், அதிகமான சிற்றின்ப ஈடுபாட்டால் காலத்திற்கு முன்பே முதுமைக் கோலம் கொண்டுவிட்ட சிவந்த மேனி, வஞ்சக உருவுக்கு திருநீற்றினால் பக்திப் பூச்சு, கழுத்திலே உருத்திராட்சம், கையில் தங்கப் பூண் கட்டிய தடி, மேலே பட்டு, இடையிலே பீதாம்பரம், நடையிலே மிடுக்கு, சிரிப்பிலே நரித்தனம், சொல்லிலே தேவஜபம், சிந்தனையில் சிங்காரிகளின் நாமாவளி—இந்தத் திருக் கலியாண குணவிசேஷங்களோடு நடமாடும் தசைப் பிண்டம்தான் தலைமைப் புரோகிதன்!

புரோகிதனைக் கண்ட புவனா, சோமேசரே வந்து காட்சி தந்துவிட்டது போன்று எல்லையில்லா மகிழ்ச்சி அடைந்தாள்.

"சுவாமி, நல்ல நேரத்திலே வந்தீர்கள் — என் பிரார்த்தனை பலித்து விட்டது சுவாமி!" —புவனாவின் விழிகளில் நன்றி பிரவகித்தது.

"தீர்க்க சுமங்கலியாகுபவ!" என்று குங்குமச் சிமிழிலிருந்த

[தொடர்ச்சி பக்கம்—8]

# ★ ★ பாசறை அமையட்டும்! ★ ★

## அன்புள்ள பொன்முடி!

1938-ம் ஆண்டு — பதினைந்து வயதைத் தொட்டும் தொடாமலுமிருக்கிற பருவம் எனக்கு!

பள்ளி மாணவன்—துள்ளித் திரிவதும் இளமை நினைவுகளை அள்ளிச் சுவைப்பதும். அந்தப் பருவத்திற்கேற்ற நிலையெனினும் அவைகளில் கவனம் செலுத்தாமல் செந்தமிழைக் காத்திட எழுந்த சேனையில் வாலிபத் தமிழரெல்லாம் வரிசை காட்டி நின்ற காலம். கொஞ்ச வயதினன் ஆயினும்கொத்தவரும் பாம்பை உணர்ந்திடும் அறிவு கொண்டவனகையால் தமிழ்த் தாய்க்கு என் கடமையைச் செய்திடத் துணிந்தேன்.

தமிழ் நாடெங்கும் அமளி!

தெருவெல்லாம் தமிழ் முழக்கம்!

ஊருக்கு ஒரு தமிழர் பாசறை!

வீட்டுக்கொரு போர் வீரன்!

நரை முடிக் கிழவரும் கிழவியும் அணிவகுப்பில்!

சாதுக்கள் மிரண்டனர்-காடு கொள்ளுமா?

கமண்டலங்கள் இருந்த கைகளில் அறப் போர்க் கட்கங்கள்!

சிறு கை நீட்டிக் குறு நகை காட்டும் அரும்புச் செல்வங்களும் அடைபட்டன சிறைச் சாலையில்!

"இந்திக்குத் தமிழ் நாட்டில் ஆதிக்கமா? எல்லோரும் வாருங்கள் தோழர்களே!"

—அழைப்பு அனலெனக் கிளம்பிற்று!

"ஓடிவந்த இந்திப் பெண்ணே! கேள்! நீ, தேடிவந்த கோழையுள்ள நாடிதல்லவே!"

—எச்சரிக்கை இடியென ஒலித்தது.

இரு பெரும் வீரர்களின் பிணங்கள் விழுந்தன. வயிற்றுக்குள் வைர மணி விளக்குகளை ஏந்தியிருந்த மாதர்குல மாணிக்கங்களும் மாத்தமிழுக்கு ஊறு வந்தால் பொறுப்பதுண்டோ எனக் கேட்டுச் சிறைக் கோட்டம் சென்றனர்.

தமிழ் மொழிக்கு ஒரு புதிய சகாப்தமே உதயமாயிற்று. தமிழின் இனிமையும் தொன்மையும், அது அளிக்கும் அகமும் புறமும், அது பாடிக் காட்டும் கலிங்கத்துப் பரணியும், ஆடியொலிக்கும் சிலம்பும், கூடி மகிழ்வதற்கேற்ற நற்றிணை விருந்தும், கொள்கை வகுக்கும் குறளின் ஏற்றமும் தமிழர்களின் செவி வழி நுழைந்து, சிந்தை [illegible] விந்தை மனிதர் புகுத்துகின்ற இந்திதனை மாய்த்தொழிக்கும் பேராற்றலை நல்கிடும் அளவுக்கு ஒரு எழுச்சி மிக்க சரித்திரத் திருப்பமே உருவாயிற்று!

தமிழால் வாழ்ந்த புலவர்களும் ஏறு நடை போட்டு எக்காளக் குரல் தந்தனர், "இந்தி ஒழிக" என்று!

கொட்டடா கொட்டடா முரசெனவே திக்கெட்டும் தீரர் படை கிளம்பிற்று!

அடடா; அந்த நாளை நினைத்துப் பார்த்தால் இப்போதும் நெஞ்சு இனிக்கிறது பொன் முடி! விந்தியத்தின் தோற்றமென நின்று, விழி நிறைய ஒளி கொட்டி, வெற்றிச் சிரிபபும் வெந்தழற் பேச்சும் ஒருங்கே சிந்துகின்ற அஞ்சா நெஞ்சினன் அண்ணன் அழகிரியின் தலைமையிலே இந்தி எதிர்ப்புப் போருக்குத் தமிழர் படை புறப்பட்ட காட்சியும். அதியமானின் ஒளவையென நரை மூதாட்டி மூவலூர் ராமாமிர்தம் அம்மை நடை போட்ட பாங்கும் அழியாத சித்திரமடா நண்பா, அழியாத சித்திரம்!

தமிழர் படை செல்லுகின்ற மார்க்கத்தில் இந்திக்குச் சாமரம் வீசுகின்ற மந்திக் குணத்தினர் சிலர் சேர்ந்து செருப்பாலே தோரணங் கட்டினர். படைத் தலைவர் அழகிரியார் தோரணத்தின் முன்னால் நின்று கடல் மடை திறந்ததுபோல் கர்ச்சித்தார். தமிழ் ஒழிக்கப் புறப்பட்ட தருக்கர்களின் இழிகுணத்தை எடுத்துரைத்தார். "இந்தத் தலைமுறையோடு தமிழும் தமிழனும் ஒழிந்துவிட வேண்டுமா?" எனக் கேட்டார். "அப்படி ஒழிந்துவிட்டால், தமிழர்கள் பூண்டற்றுப் போய்விட்டால், தமிழகத்துக் காடுகளில் பறக்கின்ற புள்ளினங்கள்—குருவிகளும் காக்கைகளும் தமிழர்களின் வீரத்தைக் கேலி செய்யும்! விலங்கினங்கள் 'வெட்கம், வெட்கம்' எனக் குரல் காட்டும்! என் செய்வேன்; இந்தத் தன்மானமற்ற தமிழரோடு சேர்ந்து பிறந்த குற்றத்திற்கு யாரிடம் மன்னிப்புக் கேட்பேன்?" எனக் கண்ணீர் விட்டார். பேசினார்; பேசினார்; பேசிக்கொண்டே நின்றார். தொண்டையிலிருந்து குருதி வழிந்தது. பேச்சை நிறுத்தவில்லை. கோணல் மதி படைத்தோருக்கு அறிவு வந்தது. இழிவுத் தோரணத்தை அவர்களே அப்புறப்படுத்தி மன்னிப்புக் கேட்டனர். தமிழர் படை மீண்டும் பயணத்தைத் தொடர்ந்தது. இது ஒரு நிகழ்ச்சி; அறப் போராட்டத்தில்!

—இப்படி எத்தனை எத்தனை உள்ளத்தை உறுக்கும் நிகழ்ச்சிகள்!

பெரியாரைத் தள்ளாத வயதில் பெல்லாரி சிறையில் பூட்டி வாட்டினர்!

அண்ணாவும் அறப் போர்த் தளபதிகளும் கடுங்காவல் தண்டனைகள் ஏற்றனர்!

**கருணாநிதி**

தமிழகத்தின் பட்டி தொட்டிகளில் எல்லாம் மாலை மஞ்சள் வெயிலில் தமிழர்கள் பவனி புறப்படுவர். எதற்காக? உல்லாசமாக ஊர் சுற்றி வரவா? மார்கழித் திங்களில் மல்லிகைச் சரங்களைத் தோளில் போட்டுக் கொண்டு கையில் ஜால்ராக்களுடன் பஜனை கோஷ்டி புறப்படுவார்களே; அது போலவா? அல்ல! அல்ல! நாள்தோறும் மாலை வேளைகளில் தமிழ் முழக்கம் செய்து, தூங்கும் தமிழர்களைத் தட்டி யெழிப்ப! ஊர் தோறும் அந்த ஊர்வலம் உண்டு! நூறு தொண்டர்கள்! ஆயிரக் கணக்கான பொது மக்கள் பின் தொடர ஊர்வலம்! "தமிழ் வாழ்க! கட்டாய இந்தி ஒழிக!" இதுவே முழக்கம்! ஊரே அதிரும் முழக்கம் கேட்டு!

பள்ளிக்கூடம் எப்போது முடியும் என எதிர்பார்த்துக் கொண்டேயிருப்பேன். ஏன்; கால் பந்து, பூப்பந்து விளையாடவா? கவாத்து பழகவா? கடைத்தெரு செல்லவா? அல்ல நண்பனே; திருவாரூர் ஊர்வலத்துக்கு நான்தான் முழக்கமிடும் முன்னேடும் பிள்ளை! "தமிழ்!" என்பேன்—"வாழ்க!" என்ற ஒலி வானை முட்டும்!

"தமிழ் வாழ்க!"

"தங்கத் தமிழ் வாழ்க!"

"சிங்கத் தமிழ் வாழ்க!"

"சிலப்பதிகாரம் தந்த தமிழ் வாழ்க!"

## நீட்டோலை

"உலகத்தோடு பிறந்த தமிழ் வாழ்க!"

"இலக்கணமற்ற இந்தி ஒழிக!"

"ஆதிக்கமொழி இந்தி ஒழிக!"

"தமிழைச் சீரழிக்க வந்த இந்தி ஒழிக!"

"வட நாட்டு இந்தி ஒழிக!"

எங்களுக்கு முன்னே ஒரு பெரிய ஓவியம் வண்டியில் வைத்து இழுத்துச் செல்லப்படும், தமிழ்த் தாயின் எழிற் கோலம்! அவளைக் கூரிய வாளால் குத்திக் கொல்லப் பாய்ந்திடும் ஆச்சாரியாரின் உருவம்! அதனைக் கண்டு உணர்ச்சி பெற்ற தமிழர் ஏராளம்—ஏராளம்! பாடிக்கொண்டே எங்கள் படை ஊரைச் சுற்றி வரும்! பார்ப்பனர் வீதிகளில், பழங்குடி மக்களின் சேரிகளில், கோயில் வாயில்களில், குப்பை மேடுகளில் எங்கெங்கே மனித நடமாட்டமிருக்கிறதோ, அங்கெல்லாம் எங்கள் ஊர்வலம் நுழையும். பிரச்சாரம் செய்யும். தமிழ் காக்கும் படை பெருகும்.

என் பிஞ்சு மனதிலே தமிழ் உணர்ச்சி எத்தகைய புதுமையைப் புரிந்தது என்பதை உனக்குக் குறிப்பிட விரும்புகிறேன்; பெருமைக்காக அல்ல—மீண்டும் தமிழ் காக்கும் போரில் குதிக்கும் கட்டம் வருகிற காரணத்தால் அதற்குச் சிறிது பயன்படும் என்பதால்!

"தட்ச யக்ஞம்" என்று ஒரு படம்! அதிலே ஒரு பாட்டு! "வாருங்கள்; எல்லோரும் தட்சன் யாகசாலை சென்றிடுவோம்! வந்திருக்கும் அரக்கர்களை அழித்துத் திரும்பிடுவோம்!" என்பதாக!

அந்த மெட்டில் ஒரு பாட்டு எழுதி எங்கள் பவனிக்குப்பயன்படுத்தினேன். முழுவதும் ஞாபகமில்லை. இதோ அது!

"வாருங்கள் எல்லோரும்
இந்திப் போருக்குச்
சென்றிடுவோம்
வந்திருக்கும் இந்திப்பேயை
விரட்டித் திரும்பிடுவோம்
கானகத்துப் புலிபோல்
உறுமிக் கிளம்பிடுவோம்!
கட்டிக்கரும்பாம் தமிழதனைக்
காத்து மகிழ்ந்திடுவோம்!"

இளம் இதயத்தில் இந்த எழுச்சியை ஊட்டிடும் வகையில் இந்தி எதிர்ப்புப் போர் மூண்டது அந்நாள்!

போராட்ட வீரர் ஒருவரை வழக்கு மன்றத்தில் ஒரு நீதிபதி கேட்டார்; "உன் சாதித் தொழிலை நீ செய்யாமல் ஏன் இந்தி எதிர்ப்புப் போருக்கு வந்தாய்?" என்று!

கேட்ட நீதிபதி பார்ப்பன குலத்தவர். உடனே அறப் போர் வீரர் அவரைப் பார்த்து "அவரவர் சாதித் தொழிலைசெய்வதாயின் தாங்கள் இங்கு நீதிபதியாக அமர்ந்திருக்க முடியாதே! ஆற்றங்கரை, குளத்தங்கரைகளில் அல்லவா உட்கார்ந்து தட்சணை தருவோர் வரவு பார்த்திருக்க வேண்டும்!" என்று பதில் கூறினார்.


தயாராகின்றன!

மு. கருணாநிதியின்
எழுத்தோவியம்

**கண்ணடக்கம்**

★

கே. ஜி. இராதாமணாளன் எழுதிய
**எழிலரசி கிளியோபாட்ரா**
**பசி**

[கட்டபொம்மன் காலத்து வரலாற்றுக் கற்பனை]

திராவிடப்பண்ணை
திருச்சி—2

# ★ 'படை திரளட்டும்! ★

பார்ப்பனர்களும் இந்தி எதிர்ப்புப் போரில் கலந்து கொண்டு பணியாற்றினர். பரவஸ்து ராசகோபாலச்சாரியார் என்று ஒருவர். தமிழறிந்தவர். அவர் இந்தியை எதிர்த்து மேடைதோறும் சங்கநாதம் செய்தார்.

"இந்தி தேவையில்லை; கட்டாய இந்தித் திட்டத்தை திரும்பப் பெறுக" என சட்டமன்றத்தில் ஓர் பன்னீர் செல்வம் கருத்துரையாற்றிய நேரத்தில் "உமது பேச்சுக்கு இந்தக் காதைத் திருப்பி வைத்திருக்கிறேன்" என்று தனது கேளாக் காதைத் தொட்டுக் காட்டி ஆணவ மொழி பகன்றார் ஆச்சாரியார்.

"ஈ. வெ. ரா.வும் சோமசுந்தர பாரதியும்—இந்த இருவர்தான் கட்டாய இந்தியை எதிர்க்கிறார்கள்!" என்றார் ஆச்சாரியார்.

"எதிர்ப்பது இருவராயின் இந்தியைக் கொண்டு வருவது தாங்கள் ஒருவர்தானே!" எனக் கேட்டு அந்நாள் ஆச்சாரியாரின் வாயை மூடினார் பன்னீர்ச் செல்வம்.

தமிழரின் கண்டனத்தைத் தெரிவிக்க ஆச்சாரியார் சென்ற இடமெல்லாம் கருப்புக்கொடி காட்டப்பட்டது. வரலாற்றுப் புகழ்பெற்ற அந்தப் போராட்டத்தில் தமிழர் வென்றனர். தமிழ் வென்றது. மீண்டும் இடையிலே ஆபத்து அரும்பி, தூங்கும் புலியை இடற எண்ணியவர்கள் தங்களைத் தாங்களே சற்று திருத்திக் கொண்டு இப்போது மிகமிக ஆதிபத்ய வெறி தலைக்கேறி விட்டதை நாட்டுக்கு அறிவிப்பதுபோல் இந்திக்கு அரியாசனம் அமைக்க முற்பட்டு விட்டார்கள்; தமிழகத்தில்!

முதல் இந்தி எதிர்ப்புப் போராட்டம் தமிழருக்கு நாடு, இனம், மொழிப்பற்று என்ற உணர்ச்சிகளைத் தந்தது. தமிழர் படையில் வலிவையும் பொலிவையும் சேர்த்தது. தமிழுக்கும் தமிழகத்துக்கும் மறுமலர்ச்சித் தூதுவராக மாபெருந் தலைவர் ஒருவரை நமக்கு அளித்தது. யாரைக் குறிப்பிடுகிறேன் என்று புரிகிறதல்லவா உனக்கு!

சிந்துபாடும் அருவியோ—சிந்தை மணக்கும் கொம்புத் தேனோ-செந்தமிழின் சுவை தானோ-நொந்த மனம் குளிர்வதற்குப் புறப்பட்ட வெண்ணிலவோ-எனத் தமிழ் நாடே வியப்பிலாழ்ந்து வாழ்த்தி மகிழ்ந்து வரவேற்கப்பட்ட நமது அண்ணாவைத்தான் குறிப்பிடுகிறேன்; இந்தி எதிர்ப்புப் போர் தமிழகத்துக்குத் தந்த மாபெரும் வெற்றியின் வடிவமே அவர்தான்!

மறைந்தது பகை-இனி மறந்தும் நுழையாது என மகிழ்ந்திருந்தோம். இதோ; எதிரிகளின் படை வரும் ஒலி தொலைவிலே கேட்கிறது. அறப்போர் தமிழர் தம் இல்லங்களில் கதவுகளைத் தட்டுகிறது. இந்திக்கு சாம்ராஜ்யம் அமைக்க சைன்யம் கிளம்பி விட்டது. நமது கோட்டை முற்றுகையிடப் படுகிறது எதிரியினால்! நமது வீரர்களுக்கு வேலை வந்து விட்டது, பொன்முடி! எனக்கும் உனக்கும் நம்மைப் போன்ற ஆயிரமாயிரம் வாலிபர்களுக்கும் வேலை வந்து விட்டது; களம் புகும் நேரம் நம்மை வேகமாக அணுகிக்கொண்டிருக்கிறது. எப்படியாவது கொடி நாட்டி விடுவது எனக் கங்கணம் கட்டி, இந்தி மகாராணித் தமிழ் நாட்டின் மீது ஆதிக்கம் செலுத்த வருகிறாள். அவள் வெட்கித் தலை குனியும் வண்ணம் விரட்டியடிக்கப்பட வேண்டும். வடநாட்டு ஏகாதிபத்தியத்துக்கு அடித்தளம் அமைத்து, அதைக் கெட்டிப்படுத்தும் காரியமே இந்தியின் வாயிலாக நடைபெறப் போகிறது. அந்த அடிமைத் தளத்தை சுக்கல் சுக்கலாக—பொடிப் பொடியாக ஆக்கியே தீர வேண்டும்!

நமக்கென நாடு—நமக்கென ஆட்சி—நமக்கென உரிமையெல்லாம் கிடைக்கும் வரை, நம்மனோர் வாழ்க்கையில் ஒவ்வொரு விநாடியும் போராட்டந்தான்!

அதோ தெரிகிறது; தாளமுத்து நடராசன் கல்லறைகள்! தமிழுக்கு ஆவியீந்த தங்கங்கள்! தன்னேரில்லாத் தமிழ்ச்சிங்கங்கள்! அவர்களின் வீரத் திருநாமம் மனதிலே மலரட்டும். போர் மணம் கமழட்டும். புலியெனச் சீறித் தமிழர்கள் களம் நோக்கிப் பாயட்டும். இப்படி ஆணை கிடைத்து அறப்போர் அணிவகுப்புப் போராட்டத்தில் குதித்திட நேருமாயின் அதில் ஆச்சரியப்பட என்ன இருக்கிறது!

தமிழன் தன் எதிரே வரும் பகையைக் காணுகிறான். அயர்ந்தால் கூண்டோடு அழிந்தோம் என்ற உண்மையைப் புரிந்து கொள்கிறான். தமிழைக் காப்பாற்றத் தன்னையே அர்ப்பணிக்கத் தயாராகிக் கொள்கிறான். அவன் கண்முன்னே தமிழ் நிலத்தின் பழைய ஏடுகள் புரள்கின்றன.

அந்நாள் ஆண்ட மறத்தமிழன் கனகனையும் விசயனையும் களத்தினில் சந்திப்பான். அந்த மன்னர் சிரம் நொறுங்கக் கண்ணகிக்குச் சிலைநாட்டக் கல்லேற்றி சிங்க நடை போட்டு வருவான். ரத்தம் படிந்த வெற்றி முரசின் ஒலியும் 'வாழ்க தமிழன்!' என்ற கீதமும் இதயத்தில் எழுந்து, வீதியதில் எதிரொலித்து, கன்யா குமரியின் கடலோசையில் கலக்கும். வாடிக் கிடந்த காதலியை வெற்றி முரசும் துள்ளியெழச் செய்ய—புதுத் துடிப்பால் பூரித்த இதயங்காட்டிப் பொன்னழகி வழி பார்த்து நிற்க—"தென்றலே! என்னைத் தேடித் துவண்டாயோ?" என்று வந்த [illegible] வாய் திறப்பதற்குள்......மணவாளன் மார்பினிலே விழுப்புண் கண்டு பனிப் பார்வை வீசி—அவன் மலைத் தோளில் முகத்தை ஒட்டிக் கொள்ள—இவ்வாறு காதலும் வீரமும் கரை புரண்டோடியது திராவிடத்தில் ஒரு நாள்!

வேலும் வாளும் உண்டாக்கிய ரத்தக் கடலில் பயங்கர மூச்சு விட்டுக்கொண்டு மிதந்து செல்லும் வீரர்களின் 'மண்டையோடுகளை முத்தமிட்டபடி பயணம் நடத்தும் முறிந்த எலும்புத் துண்டுகளையும் அறுந்த நரம்புத் துகள்களையும் கண்டு முகாரி பாடாமல் முதுகு காட்டாமல் முகம் சுளிக்காமல் முன்னேறு நீ! முன்னேறு நீ! என்று முரசொலித்து, எஞ்சிய வீரர்களை நெஞ்சுரங் கொள்ளச் செய்து, எந்த நேரத்தில் எந்தப் பக்கமிருந்து ஈட்டி பாயுமோ, எதிரியின் கணை பாயுமோ, என்று சாவு முகட்டிலே விநாடிகளைக் கணக்குப் பார்ப்பதும் வீரர்களுக்கு அழகில்லை-யென்ற போர்க்களத்து அரிச்சுவடியைத் தவறியும் மறந்துவிடாமல், மரணம் மாவீரனுக்குத் தரப்படும் மலர்ச் செண்டு—மங்கையின் இதழைவிடச் சுவையானது என்ற மனோ பலத்தோடு படையை நடத்திச்செல்பவனே பராக்ரமசாலி, பைந்தமிழன், பாராட்டுக் குரியவன் என்ற பாசறைக் காவியத்தின் சிறப்புப் பாயிரத்தைப் படித்தவர்கள்தான் உலவினார்கள் பண்டைத் தமிழ் நிலத்தில்!

அவர்கள் பரம்பரையினர் தாம் நாம். நமது தலைமுறையில் நமது மொழிக்கே தீமை நினைத்து விட்டார்கள். நமது தாயை நம் கண் எதிரே சித்ரவதை செய்கிறார்கள். நாம் அதை வேடிக்கை பார்த்துக் கொண்டிருக்கும் பிணங்களு மல்ல; பேடிகளுமல்லவே!

தாயின் எழில் அழிக்கப் பட்டால் எதிர்காலம் நம்மைக் காரி உமிழும்.

"வேங்கையொத்த வீரர்கள் எத்தனையோ பேர் உன் மேல் பட்டு வீழ்ந்தனரே; வீர மகனே! உன் கண்களிலே கனல் என்றால் எதிரியின் பாசறை தீக்கு இரை என்றுதானே பொருள்! உன் வீர முழக்கம் வேற்று மன்னன் கோட்டைக்கு வேட்டாயிற்றே! அவையெல்லாம் இந்நாள் எங்கே? கடல் கொள்ளாமல்—களம் புரண்ட ரத்த வெள்ளம் கொள்ளாமல் — பகைவரின் போர்த் திறம் கொள்ளாமல்—பின் எவர் கொண்டது உன் பழம் பெருமையை?"

எனத் தமிழன்னை கண்ணீர் பெருக்கி அழுதிடும் நிலையை நாம் நிச்சயம் உண்டாக்கப் போவதில்லை!

இந்த நாட்டில் கடைசித் தமிழன் இறுதி மூச்சு இருக்கும் வரையில் தமிழுக்குக்

[தொடர்ச்சி பக்கம்—12]

# இராமநாதபுரம் கிளர்ச்சி!

முதுகுளத்தூர் பகுதியிலே நடந்து சென்ற நிகழ்ச்சிகள் 'நெஞ்சு பொறுக்குதிலையே!'—என்ற பாரதியாரின் கவிதை வரிகளைத்தான் நினைவுபடுத்துவனவாய் இருக்கின்றன.

ஆனால் ஒன்று! தமிழரின் வீரம் தேய்ந்து விடவில்லை; வாளை எடு, வாழ்வா சாவா என்பதைப் பார்த்து விடுவோம் என்று திண்தோள் உயர்த்தி தீரப் போர் நடத்திய புறநானூற்று வீரம் ஆரியத்தின் வரவாலும்; ஆங்கிலேயரின் நுழைவாலும் அழிந்து விடவில்லை; அது குடத்தினுள் இட்ட விளக்குபோல் ஆடாமல், அசையாமல், அணையாமல் சுடர் விட்டுக் கொண்டுதான் இருக்கின்றது என்பதை வேல் கம்பு உயர்த்திச் சென்ற இரு தரப்பு மறவர் எழுச்சியும் உணர்த்தத்தான் செய்கிறது.

நமது பாட்டன்மார் காலத்தில் குடும்பத்தாரிடம் விடை பெற்று போர்க் களத்துக்குச் செல்வதுபோல் மஞ்சள் துணி தனை அரையில் உடுத்திப் படையாகப் புறப்பட்டார்களாம்!

ஆனால்......

அந்த உணர்ச்சியும் கிளர்ச்சியும் ஒரு மகோன்னத இலட்சியத்திற்காக ஏற்பட்டிருந்தால்......

அன்று மறவர் பெருமக்கள் நெஞ்சிலிருந்தும்; பழங்குடி மக்கள் மார்பிலிருந்தும் ஊற்றெடுத்து வழிந்த குருதி வெள்ளம் உண்மையிலேயே ஒரு மாபெரும் சாதனைக்காக வழிந்திருந்தால்.........

இன்னொரு புறநானூறு பாடப்பட்டிருக்கும். அம்மட்டோ; காட்டுமிராண்டியும்கூட கலிங்கத்துப் பரணி அமைத்திருப்பான்!

ஆனால்.........

அப்படி அமையவில்லை ராமநாதபுரத்துக் கிளர்ச்சி!

வீரம்—தொட்டால் தொட்ட மாத்திரத்தில் விரல்வெட்டும் ஒரு கூர்மையான பட்டாக்கத்தி! ஆனால் அந்தப் பட்டாக்கத்தியோ அந்தச் சந்தர்ப்பத்திலே தவறான கோணங்களில் திருப்பப்பட்டிருக்கிறது!

—இதற்குப் பின்னணியில் இருப்பவர்கள் யாராயிருந்தாலும்; அவர்கள் எத்தகைய உயர் பதவிப் போர்வைக்குள்ளே புகுந்து கொண்டிருந்தாலும் வன்மையாகக் கண்டிக்கத் தக்கவர்களே!

—இந்த நிகழ்ச்சிகள் இந்தியாவுக்கே மாபெரும் இழுக்கு என்று வர்ணித்திருக்கிறார் ஒரு வடநாட்டுப் பிரமுகர்! ஆனால் வடநாட்டிலே இதைவிட அதிகமாக மதத்தைக் காரணமாக வைத்து இரத்தம் சிந்தப்பட்டிருக்கிறது! நாம் மறப்பதற்கில்லை.

அப்போதெல்லாம் அமைதி காத்த தமிழகத்திலே இப்போது இரத்தக்களறி ஏற்பட்டிருக்கிறது என்பது இந்தியாவுக்கு இழுக்கல்ல; தமிழகத்துக்குத்தான் இழுக்கு! இதை முளையிலேயே கிள்ளி எறிந்து; நடுநிலை காக்கத் தவறிய தமிழ் நாட்டு ஆட்சிபீடத்திற்குத்தான் இது எப்போதும் மறைய முடியாத மாபெரும் இழுக்கு! இனிமேலாவது ஆட்சிபீட மேறிகள் வருமுன் உணர்பவர்களாக நடந்து கொள்ளட்டும்!

## பெருத்து துரைத்தனத்தார் ஊழல் . . .

[2-ம் பக்கத் தொடர்ச்சி]

என்பதையும் எடுத்துக் கூறியுள்ளார்.

வேளைக்கொரு சட்டம்; நாளைக்கொரு தீர்மானம் என்ற வகையில் அரசாங்கம் தன்னிடமிருக்கும் கட்சி பலத்தைப் பயன்படுத்தி சட்டம் இயற்றிக் கொண்டிருக்கிறது. இதனால் வீண் தொல்லைகளுக்கும் குழப்பங்களுக்கும் நாடும், மக்களும் ஆளாகின்றனர். இதை நாம் சொல்லவில்லை. 'தினமணி'யே எழுதுகிறது :

"பெரும்பாலான இராச்சியங்களில் மசோதாக்களை சட்டசபை மெம்பர்கள் சரிவர படித்தேனும் நிறைவேற்றுகிறார்கள் என்ற நிலைமை இல்லை. கட்சித் தலைமையின் ஆதிக்கம், பெரும்பாலோரின் கடமையுணர்ச்சியற்ற போக்கு, வலுவான எதிர்க் கட்சிகள் இல்லாத குறை— போன்ற காரணங்களால் சட்டம் இயற்றல் ஊழல் மலிந்ததாக ஆவதுடன், பலவகை அநீதிகள் நடைபெறுவதற்கும் காரணமாகி விடுகிறது. ஜனநாயகம் என்பது விவாதத்தின் மூலம் நடைபெறும் ஆட்சிமுறை என்பதைஆளும் கட்சியினர் பல சந்தர்ப்பங்களில் புரிந்து கொள்வதில்லை. பொது மேடைகளிலும், பத்திரிகைகளிலும் பொறுப் புணர்ச்சியுடன் 'தெரிவிக்கப்படும் மாறுபட்ட கருத்துக்களுக்கும், வெறும் யோசனைகளுக்கும் பிரிட்டிஷ் ஆட்சி காலத்தில் தரப்பட்ட மதிப்புக்கூட இப்பொழுது தரப்படுவதில்லை.சரிவரஆராய்ந்து பதில் சொல்லத் திறமை இல்லாமல் இல்லை. சொல்வதற்கு அவர்களிடம் நியாயமில்லை என்பதும், ஜவாப் சொல்லிக் கொண்டு சிரமப்படாமல் சட்டசபையிலுள்ள சொன்னபடி கேட்கும் வோட்டுப் பலத்தைக் கொண்டு எதையும் சாதித்துக் கொள்ளலாம் என்ற தைரியமும்தான் இத்தகைய போக்கிற்கு முக்கிய காரணமாகும்,"

—என்று 20—9—57 தினமணி நாளிதழ் ""நீதியின் தாமதம்" என்ற தலைப்பின் கீழ்த் தலையங்கம் தீட்டி நிர்வாகத் துறைகளில் தலைவிரித்தாடும் ஊழல்களைப் படம் பிடித்துக் காட்டுகிறது.

'செய் அல்லது செத்துமடி' என்ற பண்டிதரின் சித்தாந்தமும், 'மரத்தை நடுங்கள்; நாட்டின் வளத்தைப் பெருக்குங்கள்' என்ற முன்னாள் அமைச்சர் முன்சியாரின் உபதேசமும், 'பருத்தி விதைப் புண்ணாக்கு உடம்புக்கு நல்லது; சாப்பிடுங்கள்' என்ற முன்சியாரின் அறிவுரையும், 'உணவைப் பெருக்குங்கள்' என்ற நேரு பெருமானின் இதோபதேசமும், 'பிள்ளைப் பேற்றைக் குறையுங்கள்; கர்ப்பத்தடை செய்து கொள்ளுங்கள்' என்ற முடிசூடா மன்னரின் விண்ணப்பமும், 'சிக்கனமாய் வாழுங்கள்' என்ற திரு. கிருட்டிணமாச்சாரியாரின் வேண்டுகோளும் நாட்டு மக்கள் மத்தியில் பரப்பப்பட்டு, அவர்கள் திகிலுக்கும் பயத்துக்கும் இரையாகிக் கொண்டிருக்கும் வேளையில் 'உணவைச் சுருக்கு; உற்பத்தியைப் பெருக்கு' என்ற உபதேசம் வங்க முதல்வர் திரு. ராய் அவர்களின் திருவாயமுதாகக் கிளம்பியுள்ளது. இதே உபதேசம் வளர்ந்து எதிர் காலத்தில் 'வாழ்வைச் சுருக்கு; அதன் மூலம் நாட்டின் வளத்தைப் பெருக்கு' என்ற திட்டமாக உருவானாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நிர்வாகத்திலே இதுபோன்ற ஊழல்கள் வளர்ந்து வருவதற்குரிய காரணத்தை திருவள்ளுவப் பெருந்தகை இரண்டடிகளால் விளக்குகிறார்.

"முறைப்படச் சூழ்ந்தும் முடிவிலவே செய்வர்
திறப்பாடு இலாஅ தவர்" (640)

செயல்களை செய்து முடிக்கும் திறன் இல்லாதவர்கள், முன்னரே செய்து முடிக்க வேண்டிய வழி வகைகள் குறித்து எண்ணி வைத்திருந்த போதும் கூட, அவைகளை நிறைவேற்றும் போது குறைவானவைகளையே செய்வர் என்பது வள்ளுவர் வாக்கு. நிர்வாகத் துறைகளிலே பல கோடி ரூபாய்களைப் பாழடித்துவிட்டு, இப்பொழுது பாரத அரசாங்கம் பரதேசிக் கோலம் பூண்டு பவனி வருகிறது! பறக்கும் தட்டு கிருட்டிண மேனன், வேத விற்பன்னர் இராதாகிருட்டிணன், கிரைப் வாட்டர் கிருட்டிணமாச்சாரியார், முடிசூடா மன்னர் பண்டித நேரு ஆகியோர் உலகம் சுற்றி 'உதவி, உதவி' என்று அபயக் குரல் கொடுக்கின்றனர். நிர்வாக ஊழல் உள்நாட்டில் தொடர் கதையாய் நீண்டு வளர்கிறது. அதன் விளைவால் திருவோடு ஏந்தித் தெருவோடு போகின்ற பரதேசிக் கோலம் வெளி நாட்டில் இந்திய துணைக் கண்டத்துக்கு ஏற்பட்டுள்ளது.

—நாஞ்சில் **செ. அன்பெழில்**

## மு. கருணாநிதி நிகழ்ச்சிகள்

| | | |
|---|---|---|
| அக்டோபர் | 6 : | சென்னை—மீர்சாகிப்பேட்டை |
| ,, | 11 : | உப்பிடமங்கலம் (வெள்ளியணைப் பகுதி) |
| ,, | 13 : | திருச்சி —(காலை—பீடித் தொழிலாளர் மாநாடு) —(மாலை-இந்தி எதிர்ப்புப் பொதுக் கூட்டம்) |
| ,, | 15 : | சென்னை—மாதவரம் |
| | 19 : | காலை—இராமநாதபுரம் (சிறப்புக் கூட்டம்) மாலை—இளையாங்குடி (பொதுக் கூட்டம்) |
| | 20 : | வேதாரண்யம்—(காலை—தஞ்சை மாவட்டக் குழுக் கூட்டம்) (மாலை—பொதுக் கூட்டம்) |
| ,, | 23 : | சென்னை—இராயப்பேட்டை. |
| ,, | 27 : | சேலம் |

## சோமநாதபுரத்துச் சிலை . . .

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

குங்குமத்தை எடுத்து புவனாவின் பொன்னிற நெற்றியிலே இட்டான். அவள் மண்டியிட்டு மெய்மறந்து தன்னுடைய கண்களை அவனுடைய கால்களில் ஒத்திக் கொண்டாள். மண்டியிடும் அந்த உயிர்ச் சிற்பத்தின் ஸ்பரிசத்தால் உயிரும் உடலும் நெக்குருக, அந்த அழகுக் குவியலை அப்படியே இரு கரங்களாலும் தூக்கி நிறுத்தினான். அவளோ பக்தி மேலீட்டால் புரோகிதனின் பிடியிலிருந்து விலகி, கூனிக் குறுகி நின்றாள்.

"அவர் பிழைத்து விடுவாரா சுவாமி ?"—அவள் கேட்டாள்.

"ஜெய் சங்கர் ! ஹரே சங்கா !" என்றான் புரோகிதன், அவளைப் பார்த்து விஷமமாகச் சிரித்துக் கொண்டே. பிறகு மெதுவாக நோயாளியின் கட்டிலருகில் சென்றான். புரோகிதனைக் கண்டவுடன், நோயாளி கூடப் புத்துணர்ச்சி பெற்றது போல தலையைத் தூக்கிப் பார்த்தான்.

"சுவாமி, நான் பிழைத்துக் கொள்வேனா ?"-ஆதங்கத்தோடு அவன் கேட்டான்.

"மகனே, உன் ஆத்மா குடி புக புதிய உடலைத் தேடிக் கொண்டிருக்கிறது. எதாவது பாபங்கள் செய்திருந்தால் இப்பொழுதே சொல்லி பிராயச்சித்தம் செய்து கொள்...இல்லாவிட்டால் உன் ஆவி நரகத்தில் பேயாகவும் பிசாசாகவும் கிடந்து துன்பப்படும்" — புரோகிதன் ஆத்ம நிலையின் லாப நஷ்டப் பரிசிலனை செய்தான்.

"சுவாமி, இதுவரையில் வேதங்கள் சொன்ன அனுஷ்டானங்களில் இம்மியளவும் நான் பிசகி நடந்ததில்லை... நான் இன்னும் கொஞ்ச நாட்களாவது வாழ வழியில்லையா சுவாமி ?"

"என் இல்லை? இருக்கிறது; மனமுண்டானால் வழியுண்டு !"

"என்ன செய்ய வேண்டும்? உடனே சொல்லுங்கள் சுவாமி ; செய்கிறேன் !"

"உன் மனைவியை நாள் தவறாமல் அந்தி நேரத்தில் சோமேஸ்வரர் சன்னிதானத்தில் குறைந்தது இரண்டு நாழிகைக் காலம் நிஷ்டையில் இருந்து பிரார்த்தனை செய்யச் சொல்......உன் இஷ்டம் நிறைவேறும் !"

"ஆகா......இதுதானா பிரமாதம்? கட்டாயம் அவளை செய்யச் சொல்லுகிறேன், குருதேவா !" என்றான் புவனாவின் கணவன் திருப்தியோடு.

"ஜெய் சங்கர் ! ஹரே சங்கர் !" என்று கூறிக்கொண்டே, ஒரு உருண்டை அபினியை டப்பியிலிருந்து எடுத்து வாயில் போட்டுக் கொண்டான் புரோகிதன். மெதுவாக எழுந்து ஒரு அறையில் ஒதுங்கி நின்று கொண்டு அருகே வரும்படி புவனாவிற்குச் சைகை காட்டினான். குழிவிழுந்த அவன் கண்களிலிருந்து ஆசை ஜுவாலை விட்டுக் கொண்டிருந்தது. குருதேவனின் அழைப்பை நிராகரிக்க முடியாமல் அவனை நெருங்கினாள். புரோகிதனின் நிலை அவளுக்கு அச்சத்தை மூட்டியது !

"மகளே, உண்மையைச் சொல்ல வேண்டுமானால் உன் கணவன் இன்னும் சில நாழிகையில் இறந்து போய்விடுவான்..."

"சுவாமி !"— அவள் விக்கி விக்கி அழுதாள்.

"அழாதே பெண்ணே! அவன் எழுதியதை அவனன்றி வேறு யார் அழித்து எழுத முடியும்? ஆனால் உன் கணவன் இறந்த பின், அவன் சிதையோடு நீயும் சுட்டெரிக்கப்படுவாய்...அதைச் சற்று எண்ணிப் பார் !"

"சுவாமி, அப்பொழுதுதான் சுவர்க்கம் எனக்குக் கிடைக்குமென்றால் அதையே நான் பெரிதும் விரும்புகின்றேன் !"-அவள் உறுதியோடு பேசினாள்.

"அதுதான் என்ன நிச்சயம்? உன் கணவனோ இளைஞன். இளம் ரத்தத்திற்குப் பாபத்திடம் கவர்ச்சி அதிகம்...அவன் பாபவானாயிருந்து நரகம் சென்றால் உன் ஆத்மாவும் நரகத்துக்குத்தானே அவனோடு போகும் ?"

"அப்படியானால்..."

"உன் குழந்தையை எண்ணிப் பார்...சம்சார தர்மம் கணவனோடுமட்டும் நின்று விடுவதில்லை.........புத்திரக் கட்மை யென்ற ஒன்றும் இருக்கிறது..."

புவனா குழம்பினாள் ; புரோகிதனோ அபினியின் போதையின்பத்தில் மிதந்து சென்று கொண்டிருந்தான்.

"நான் என்ன செய்யவேண்டுமென்பதற்கு வழி காட்டுங்கள் சுவாமி..."

"பிறகு நான் எதற்காக இருக்கிறேன் பெண்ணே! ஆண்டவன்—சோமநாதரின் திருச் சந்நிதானத்திற்கு இன்று அந்தி வேளையில் வந்து பார்! ஆடலும் பாடலும் அழகுமிகு அணங்குகளின் தேவசேவையும் அலைக்கழியும் உன் உள்ளத்திற்குப் புத்துணர்வு ஊட்டும்...என் அப்பனின் திருவருள் ஆட்சி செய்யும் கோவில் மண்டபத்தில் பூலோக சுவர்க்கத்தைக் கண்டு களிப்பாய்...சோமேஸ்வரன் சந்நதி ஒரு இன்பக்கேணி! பேரின்ப வீடு ! சுவர்க்கமும் அதற்கில்லை ஈடு !! அது, அபலைகளின் அடைக்கல பூமி ! கைம்பெண்கள் தேவபூஜை செய்யும் 'கன்னிமாடம்'! ஒருமுறை அந்தப் பேரின்பத்தை அனுபவித்துப் பார்......பிறகு...பிறகு..." -புரோகிதனின் கண்கள் கொவ்வைப் பழமாயின ; நரம்புகள் முறுக்கேறின ; அபின் முழுச் சக்தியோடு வேலை செய்தது.

"கட்டாயம் தியானத்திற்கு வருகிறேன் சுவாமி !"—கள்ளங் கபடமற்ற உள்ளத்தோடு, கணவன் பிழைக்கவும், தன் கனவு நனவாகவும், பிரார்த்தனையும் தியானமும் பலனளிக்கும் என்ற நம்பிக்கையில் அந்தி வேளையில் ஆலயத்திற்குவர ஒப்புக்கொண்டாள் புவனா !

ஆசையோடு அவளுடைய தோளை ஒருமுறை உலுக்கி விட்டு, கண்களில் காமம் பொங்க, நெஞ்சத்தில் வஞ்சனை நிறைய, அஞ்சுகத்தின் வரவை ஆவலோடு எதிர் பார்த்தபடியே போகப்பூனை புவனாவின் இல்லத்திலிருந்து, நாக்கைச் 'சூள்' கொட்டிக் கொண்டே வெளியேறியது.

வேங்கையின் குகைநோக்கிச் செல்ல வெள்ளாடு, மாலையின் வரவை ஆவலோடு எதிர் நோக்கிக் கொண்டிருந்தது.

# 'ஞானசம்பந்தரே! ஞானசம்பந்தரே!' என்ன சம்பந்தமோ உமது பேச்சு?

"இது அரசியல் கூட்டமா? சரி; பிடி தி. மு. க. வை! 'அவர்களுக்கு அரசியல் தெரியாது; அல்லது வடக்கு தெற்கு என்று பேசத்தான் தெரியும்; அல்லது அடுக்குச் சொல் கொட்டுவதற்குத்தான் தெரியும்—என்று பேசு!"

O

"இது அரசியல் அல்லாத கூட்டமா? அப்படியானால் இதற்கு இத்தனை 'அல்லதுகளுமே' தேவையில்லை. தி. மு. கழகத்தவர்கள் நாஸ்திகர்கள்; கடவுள் இல்லையென்று கூறுபவர்கள். எனவே நாஸ்திகம் ஒழிக்கப்பட வேண்டும்—என்று பேசு"

—இப்படி இரு பக்கங்கள் கொண்ட 'கிராமபோன் பிளேட்'டைத் திரும்பத் திரும்ப வைத்துக் கொண்டு பல ஆண்டுகளாகப் பட்டிகளிலும் பாக்கங்களிலும்; பேட்டைகளிலும் குறிச்சிகளிலும் பிரச்சாரம் செய்து வருவது வேறு யாருமல்ல; அகில இந்தியாவிலும் கிளைகளைப் பெற்று; அகில உலகத்திலும் புகழ் பெற்ற தலைவரைப் பெற்றிருக்கும் காங்கிரஸ்தான்!

அதிலும் முக்கியமாக நிதியமைச்சர் சுப்ரமணியம்! அவர்தான் 'சட்டசபையிலே தி. மு. கழகத்தினர் சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்கிறார்கள்' என்று பேசினார்! ஆனால் அவர்தான் இப்போது திரும்பத் திரும்ப அந்தப் பழைய 'கிராமபோன் பிளேட்'டையே ஒலி பரப்பிக் கொண்டிருக்கிறார்!

தமிழகத்து அமைச்சர்கள் கலந்து கொள்கிற எந்தப் பொதுக் கூட்டத்தை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளுங்கள்; தி. மு. க. என்கிற மூன்று எழுத்துக்களை ஒருமுறையாவது உச்சரிக்காத பிரசங்கமே இருக்காது!

பாவம்; திடீரென்று இந்த அமைச்சர்களை வெளிநாட்டிற்கு அனுப்பி வைத்தாலும் அங்கும் சென்று அவர்கள் அப்படித்தான் பேசுவார்கள் போலிருக்கிறது!

கட்டிடத் திறப்பு விழாவிலே கழகத் தாக்குதல்!

கலை விழாவிலே கழகத்திற்கு வசைமாரி!

'மரம் நடு விழா'விலே கழகத்திற்கு எதிர்ப்பு!

மலிவுப் பதிப்பு வெளியீட்டு விழாவிலும் இதே பேச்சுத்தான்!

—அதே முறையைப் பின்பற்றித்தான் அக்டோபர் 3-ம் தேதியன்று சென்னையிலே நடைபெற்ற 'அஷ்டப் பிரபந்தம்', 'கல்லாடம்' ஆகிய நூல்களின் தமிழ் மலிவுப் பதிப்பு விழாவிலே கலந்து கொண்ட நிதியமைச்சர் சுப்ரமணியனார் கீழ்க் கண்டவாறு பேசியிருக்கிறார் :

"நமது பழம் பெரும் நூல்கள் பெரும்பாலும் தெய்வ பக்தியை அடிப்படையாகக் கொண்டவை.........கடவுள் இல்லை என்று வாதிக்கிறவர்கள், இன்றைய நிலையில், உண்மையில் தமிழ்மொழி வளர்வதற்குத் தடையாகவே இருக்கின்றனர் என்று கருதுகிறேன்!"

—"இது அரசியல் அல்லாத கூட்டமா? சரி; தி. மு. கழகத்தவர்கள் நாஸ்திகர்கள்; கடவுள் இல்லை என்று கூறுபவர்கள்; எனவே நாஸ்திகம் ஒழிக்கப்பட வேண்டும்"— என்கிற கிராமபோன் ரெக்கார்டைத் திருப்பி வைக்க முயன்றதன் எதிரொலியாகத்தான் சுப்ரமணியனார் மேற்கண்ட வாசகங்களைப் பிரயோகித்திருக்கிறார்!

'அஷ்டப் பிரபந்தம்' புத்தகத்தின் விழாவிற்கு வந்திருந்தவர் அந்த நூலின் பெருமையைப் பற்றியோ; அல்லது குறைகள் பற்றியோ ஒரு வார்த்தை குறிப்பிடவில்லை. ஆனால் அவரோ கல்யாண வீட்டிற்கு சங்கீதக் கச்சேரி செய்ய வந்தவன்; இரு கைகளாலும் மாரடித்துக் கொண்டு ஒப்பாரி வைப்பதைப் போல் சம்பந்தப்பட்ட புத்தகங்களைப் பற்றிப் பேசாமல் நாத்திகத்திற்கு எதிராக ஒரு பிரபந்தமே பாடித் தீர்த்திருக்கிறார்!

—சரி; குறிப்பிட்ட புத்தகத்தைப் பற்றியாவது பேச வேண்டாம்; புத்தகம் என்கிற தலைப்பில் அடங்கி வருகிற பொது விஷயங்கள் பற்றியாவது பேசியிருக்கிறாரா?

—அதுவுமில்லை.

பாவம்! இப்படி சம்மந்தா சம்மந்தமில்லாமல்; தன்னை அழைத்துத் தொலைத்து விட்டார்களே, என்பதற்காகவும்; நேரத்தை வளர்ப்பதற்காகவும் எதை எதையோ உளறிக் கொட்டும் இந்த உத்தமர்தான் பேசுகிறார்,

"தி. மு. கழகத்தவருக்கு சட்டசபையிலே எப்படிப்பேசுவது என்றே தெரியவில்லை; பேசுகின்ற தலைப்பைவிட்டு,போதுமான புள்ளி விபரங்கள் இல்லாமலும், சம்மந்தமில்லாமலும் எதையெதையோ பேசுகிறார்கள்" என்று!

தி. மு. கழகத்தவர்கள் சட்டசபையிலே தலைப்பை விட்டு; சம்மந்தமில்லாமல் பேசுகிறார்களாம்—குற்றம் சாட்டுகிறார், சுப்ரமணியனார்!

அய்யா, ஞானசம்பந்தரே! மலிவுப் பதிப்பு விழாவிலே நீர் மட்டும் என்ன தலைப்பை ஒட்டி; சம்மந்தா சம்மந்தத்தோடு பேசியிருக்கிறீர்?

அன்று நடைபெற்றது நாஸ்திக எதிர்ப்பு விழாவா? அல்லது அஷ்டப்பிரபந்தம், கல்லாடம் போன்ற நூல்களின் மலிவுப் பதிப்பு விழாவா?

—இந்தச் சாதாரண வேற்றுமையைக்கூடப் புரிந்து கொள்ள முடியாதவர்தான் கொக்கரிக்கிறார், தமிழிலே சொற்பொழிவு முறைக்கே புதியதொரு பாணியைத் தோற்றுவித்த தி. மு. கழகத்தவர்களுக்கு சட்டசபையிலே பேசத் தெரியவில்லை—என்று!

[தொடர்ச்சி பக்கம்—12]

## பிச்சை எடு; கடன் வாங்கு; அல்லது......





## கன்னியின் சோதனை

ஆசிரியர் : பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

நான்கு சிறுகதைகளின் தொகுப்பு இந்நூல். அவற்றில் முதல் மூன்றும் "முத்தாரம்" இதழ்களில் முன்னரே வெளிவந்தவை. பன்மொழிப் புலவரின் தமக்கே உரித்தான செந்தமிழ் நடையுடன் எவருக்குமில்லாத சிறப்பான வர்ணனைத் திறனும் இக்கதைகளில் மேலோங்கி நிற்கக் காண்கிறோம். கதைகளைப் படிக்கும்போது நாமும் சம்பவம் நிகழ்ந்த காலத்துக்கும், இடத்துக்கும் பயணம் செய்து விடுகின்றோமன்றோ? பூக்கடைக்கு விளம்பரம் எதற்கு?

விலை ரூ. 1—00

## இதய தீபம்

எழுதியவர் : மக்களன்பன்

முகலாயர் ஆண்ட காலத்தில் அந்த மன்னர்களைச் சம்மந்தப்படுத்தி ஏராளமான கற்பனைக் கதைகள்—குறிப்பாகக் காதல் கதைகள்—கற்பிக்கப்பட்டுள்ளன. அம்மாதிரியான ஒன்றுதான் இந்த நாடகம். தாஜ்மஹாலை எழுப்பியதற்குப் புதிய காரணம் ஒன்றைக் கற்பனை செய்து புதிய ஒரு ஜோடிக் காதலர்களை சிருஷ்டித்திருக்கிறார் இந்த நாடகாசிரியர். அவர்கள் வழக்கம்போல் காதல் கீதம்பாடி, அந்தஸ்து பேதத்தின் காரணத்தால் பிரிக்கப்படுகின்றனர். காதலி, காதலனுக்கு விதிக்கப்பட்ட தூக்குத் தண்டனையை, அவன் வேடத்தில் தான் ஏற்று, தியாகம் புரிகிறாள். கழுமரத்துக்கும், தூக்கு மரத்துக்கும் உள்ள பேதத்தை உணராமல் குழப்பியிருக்கிறார் ஆசிரியர். "ஆட்சி"யென்று வந்தால் உடனே பக்கத்தில் "சூட்சி" (சூழ்ச்சி) என்று போடும் அநாவசிய அடுக்குச் சொற்களை ஆசிரியர் தவிர்த்திருக்கலாம்.

விலை ரூ. 1—50

## வாழ்க்கையே ஒரு கலை

ஆசிரியர் : வே. கபிலன்

திருமணப் பரிசுக்காகவே இந்நூலைத் தயாரித்துள்ளார்கள். புது வாழ்வு தொடங்குவோர்க்குப் பயன்படும் விதத்தில் தமிழகத்திலும் மற்றும் பல வெளிநாடுகளிலும் வாழ்ந்திருந்த—வாழ்ந்து வரும் சிறந்த தலைவர்கள், பேச்சாளர்கள், எழுத்தாளர்கள், விஞ்ஞானிகள், அரசியல் மேதைகள் ஆகியோரின் வாழ்க்கையிலுள்ள சிறப்பான அம்சங்களை ஏற்ற வகையில் எடுத்துக் காட்டித் தெற்றென விளங்குமாறு தொகுத்துள்ளார் ஆசிரியர். நூல் சிறிதாயினும், அறவுரைகள் மிகுதியாகக் கொண்டுள்ளது.

விலை ரூ. 1—00

## செந்தமிழ்ச் செல்வம்

ஆசிரியர் : பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார்

பதினொன்கு கட்டுரைகளின் தொகுப்பு இந்நூல். பண்டைத் தமிழரின் மாட்சிமை தெரிவிக்கும் வரலாற்றுக் காட்சிகள் ஆராய்ச்சி மெருகிடப்பட்டுக் கட்டுரை வடிவில் நம் கண்முன் நிறுத்தப்பட்டுள்ளன. தமிழுணர்ச்சி மீண்டும் தலைதூக்கி வரும் இந்நாளில் தமிழினம் விழிப்புற இதுபோன்ற நூல்கள் இன்னும் தேவை. பயிலுந்தோறும் உண்மைத் தமிழனின் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மும். தோள்கள் வீரத் தினவு கொள்ளும். பகை முடிக்கும் துடிதுடிப்பு நாடிகளில் குடிகொள்ளும். தக்க தருணத்தில் வெளியிடப்பட்டுள்ள தகுதி மிக்க நூலாகும் இது.

விலை ரூ. 2—00

மேற்கண்ட புத்தகங்கள் கிடைக்குமிடம்:

**அருணோதயம், சென்னை-14**

## தமிழர் யார்?

ஆசிரியர் : பரமதாசன்

உலகத்தில் முதலாவதாகத் தோன்றிய மனித இனம் தமிழினம் ஒன்றுதான். அதிலும் அந்த இடமும் யாழ்ப்பாணத்தை உள்ளிட்ட தமிழகந்தான்; சிங்களவர் வந்து குடியேறியவர். இலங்கைத் தமிழரை விரட்ட அவர்களுக்கு உரிமையில்லையென இச்சிறு நூலில் சில ஆதாரங்களைக் காட்டியுள்ளார் ஆசிரியர். முயற்சி பாராட்டத்தக்கதே!

விலை 30 சதம்.

வெளியிட்டோர் :

**நித்தில நிலையம், [illegible] யாழ்ப்பாணம்**

## பிறைவானம் . . .

[11-ம் பக்கத் தொடர்ச்சி]

கண்ணன் : பட்டினி கிடந்தது என்றால், வேண்டுமென்றே 'உண்ணாவிரதம்' இருக்கவில்லை அது! நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் இயற்கையானதல்லவா; அந்த இயற்கைதான் அதை அந்த நிலைக்குக் கொண்டு வந்தது! ஊண் மறந்தது; உறக்கம் மறந்தது; உற்றார் பெற்றோர் அற்ற அனாதைபோல் ஏங்கித் தவித்தது; எத்தனை நாட்கள்தான் உணவின்றி உறுதியோடு இருக்கும் உடல்? மெலிந்து கொண்டிருந்த கிளி வலுவிழந்தது; எழுந்து நிற்கும் பலமிழந்தது; கண்கள் பஞ்சடைய, கால்கள் சுருண்டுவிட பிணக்கோலமே அடைந்து விட்டது!

விசுவம் : பாவம்; அந்த ஆங்கிலேயன் என்ன செய்தான்?

கண்ணன் : என்ன செய்தான்? முதலில் பரிதாபப்பட்டான்! தன் உணவு பிடிக்கவில்லையோ என்று விதம் விதமாகத் தந்தான்! ஆங்கிலத்திலே அன்பொழுகப் பேசினான்! ஆனால் அந்தக் குரல் கேட்ட கிளியின் கண்களிலே 'கோபப் பொறி' பறந்ததை பைத்தியக்காரன், அவன் உணரவில்லை! பிறகு "அடிப்பேன்; அடங்கி விடு!" என்று மிரட்டினான்! நோயால் பீடிக்கப்பட்டிருக்கிறதோ என்று பரிசிலனை செய்தான்! ஆனால் ஒன்றே ஒன்றை மட்டும் செய்யத் தவறினான்—அதற்கு விடுதலை வழங்கவில்லை அவன்; அது சுதந்திரமாய்ப் பறந்து திரிய—சொந்த நாட்டுச் சுந்தர மொழி கேட்க—அந்த ஒரே வழிதான் இருக்கிறது என்பதை அவன் தெரியவில்லை. ஆனால் அவன்தான் என்ன செய்வான்? மனம் உடைந்து போனான்.

விசுவம் : அப்படியானால் கிளி செத்தா விட்டது? ஐயையோ!

கண்ணன் : என்ன விசுவம், அவ்வளவு சுலபத்தில் சொல்லி முடித்து விட்டாய்? சாவதற்காகவா அது அந்தக் கோலத்திலே இருந்தது? மாண்டு மடிவதற்காகவா அதன் உயிர் மூச்சு உடலோடு ஒட்டிக் கொண்டிருந்தது? அதற்கு வேண்டியது சொந்த மண்ணின் அழகு மொழி! அந்தக் கேல் மொழி பேசும் உருவத்தைக்கூட அல்ல; அந்த அருமையான குரலை — அந்த மொழியை ஒரே ஒருமுறை காது குளிரக் கேட்க மாட்டோமா என்றநப்பாசைதான் அதை வாழவைத்துக் கொண்டிருந்தது!...ஒருநாள் அதிகாலை!...கிளி எங்கிருந்தோ எழும்பிய குரல் ஒன்றைக் கேட்டுத் திடுக்கிட்டது!

விசுவம் : என்ன குரல் அது?

கண்ணன் : "கொஞ்சம் தண்ணீர் தர முடியுமா?" என்று எழுந்த குரல! அதைக் கேட்டு கிளி திடுக்கிடுவானேன் என்கிறாயா? அந்தக் குரல் எழுந்தது ஆங்கில மொழியில் அல்ல!

விசுவம் : பிறகு?...

கண்ணன் : எந்தக் குரலின் சுவையை செவிக்கு விருந்தாகத் தரவேண்டும் என்று நேற்றுவரைப் போராடி வந்ததோ அந்தக் கிளி—அந்தக் கேல் மொழியில்தான் பேச்சு எழுந்தது. மறுகணம் கிளி தாழ்ந்து கிடந்த அதன் தலையை மெதுவாகத் தூக்கியது! வாசலில் வந்து நின்று அயர்லாந்து நாட்டு ஏழை ஒருவன் மறுபடியும் கத்தினான்....அந்த..!அதே.....கேல் மொழியில்தான்! மறுகணம், என்ன ஆச்சரியம்! திடீரென்று எழுந்தது கிளி; படபடவென்று தன் இறக்கைகள் இரண்டையும் அடித்துக் கொண்டது; 'கீ, கீ' என்று கூச்சலிட்டுக் கத்தியது; கீழே விழுந்தது!

விசுவம்: மறுபடியும் எப்போது எழுந்தது?

கண்ணன்: ஏன் எழவேண்டும்? அது எதற்காக அன்றுவரை வாழ்ந்ததோ, எதற்காக அதனுடைய தூய உயிர் உடற்கூட்டிலே ஊசலாடிக்கொண்டிருந்ததோ, அந்த மொழியை—தன் சொந்த நாட்டு சுவை குன்றா மொழியை ஒரு முறை கேட்டபின்—களித்த பின்—களிப்பால் குதித்தபின்—அது ஏன் வாழவேண்டும்? அந்தக் கணமே அது பிணமாகக் கீழே சாய்ந்தது!

விசுவம் : ஐயையோ!...

கண்ணன் : ஆங்கிலேயன் அங்கே வந்தான். கிளி பயனற்றதாய்க் கூண்டில் கிடப்பானேன்; அதற்கு விடுதலையைத் தந்து விடுவோமே என்று கூண்டைத் திறந்தான், அது தானே விடுதலை பெற்றுவிட்டதை உணராமல்...விசுவம்!...ஏன் இப்படி உட்கார்ந்திருக்கிறாய்?...அட, ஏன் உன் கண்கள் கலங்குகின்றன?...அழுகிறாயா?

விசுவம் : அழவில்லை கண்ணா; அழவில்லை! வெட்கப்படுகிறேன்! ஒரு சாதாரண கிளிக்கு இருந்த மாசற்ற மொழிப் பற்றுகூட என்னிடம் இல்லாது, மனிதாபிமானம் மறந்த மரக்கட்டையாகிக் கிடந்தேனே நேற்று வரை என்று வேதனைப்படுகிறேன்!

கண்ணன்: அப்படியானால் நீ திருந்திவிட்டாயா?

விசுவம்: திருந்தி விட்டேன்; மூடிக் கிடந்த என் அறிவுக் கண்கள் திறந்துகொண்டன.

—சொர்ணம்

### போர்வாள் டயரி

தி. மு. க. தோழர்களுக்கு

வேண்டுகோள்

O

1958-ம் ஆண்டுக்குரிய திராவிடர் நாட்குறிப்பு (போர்வாள் டயரி) வழக்கம்போல் வெளியிடப்படுகிறது. டயரியில் தி. மு. கழகக் கிளைகளின் விவரங்கள் வெளியிடப்படுமாதலின் எல்லாக் கிளைக் கழகச் செயலாளர், துணைச் செயலாளர், பெயர்களை எழுதியனுப்புமாறு செயலாளர்களைக் கேட்டுக்கொள்ளுகிறோம். 15—10—57-ம் தேதிக்குள்கிடைக்கும் விவரங்கள் மட்டுமே டயரியில் சேர்க்கப்படும். தவறாமல் உடனே அனுப்பிவைக்கவும்.

மேலாளர்,

**"போர்வாள்"**

128, பிராட்வே, சென்னை-1.

# ★ கிளி காத்த மொழிப் பற்று! ★

[விளையாட்டு மைதானத்தில், ஒரு மூலையில் அமர்ந்திருக்கிறான். கண்ணன். அவன் கையிலே 'பாரதியார் கவிதைகள்' என்ற புத்தகம் இருக்கிறது......அப்போது அவன் நண்பன் விசுவம் அங்கு வருகிறான். அவன் பெயர் விசுவநாதன்—வீட்டிலே 'விச்சு'—பள்ளியிலே விசுவம்.]

விசுவம்: என்ன கண்ணா, ஏன் இப்படி 'உம்'மென்று உட்கார்ந்து விட்டாய்? விழிகளைத் திறந்து பார்; இது விளையாட்டு மைதானம்; பரீட்சை மண்டபமல்ல!

கண்ணன்: என் விழிகள் திறந்துதான் இருக்கின்றன; அவைகளில் கண்ணீரும் நிறைந்து இருக்கின்றது — விசுவம்! ஆனால் விழி மூடிய சில குருடர்களின் பொல்லாத பிடிவாதச் செயல் எத்தனை உள்ளங்களில் இன்று வேதனையைப் புகுத்துகிறது தெரியுமா? ஏன்; உன் விழிகளைத் திறந்துதான் இதைப் படியேன்...

[பாரதியார் கவிதைப் புத்தகத்தில் ஓரிடத்தைச் சுட்டிக் காட்டுகிறான்.]

விசுவம்: என்ன?.........எதைப் படிக்கச் சொல்கிறாய்?...'யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழிபோல் இனிதாவதெங்கும் காணோம்! பாமரராய்...' ஆமாம்; இதென்ன?

கண்ணன்: நமது தாய்மொழியின் சிறப்பு பற்றி பாரதியார் என்ன சொல்லியிருக்கிறார் பார்த்தாயா?

விசுவம்: மொழியின் பெருமை-சிறப்பு—மதிப்பு இவைகளைப் பற்றி எல்லாம் இப்போது என்ன கண்ணா கவலை?

கண்ணன்: விசுவம்! அந்த மொழிக்கு இழுக்கு நேருகிற போதுதானே அதன் அருமைகள் அடுக்கடுக்காக வெளி வருகின்றன!...மேலும்'தமிழ் வாழ்க!' என்ற முழக்கம் இன்று நேற்று எழுந்ததா? எத்தனையோ ஆண்டுகளுக்கு முன்னாலிருந்து ஒலித்து வருகிறதே! நான் நடைவண்டி தள்ளிக்கொண்டிருந்த காலம் முதல் என் செவிகளில் பட்டு வருவதை மறக்க முடியுமா?

விசுவம்: நீ எதைப்பற்றிப் பேச வருகிறாய் என்று நான் புரிந்து கொண்டு விட்டேன், கண்ணா! இந்தி மொழிப் பிரவேசம் பற்றித்தானே!......நீ என்ன; செத்துவிட்ட பாரதியார்தான் என்ன; கோடானுகோடி குரல்கள் சேர்ந்து கூக்குரல் இட்டாலும், அவ்வளவும் இந்திக்குப் 'பராக்கு' மாதிரிதான் எதிரொலிக்கும்! என்னைக் கேட்டால், 'நம்மைப் போன்ற மாணவர்கள் இந்தியைக் கட்டாயம் கற்கத்தான் வேண்டும்; அதையே பொது மொழியாக— ஆட்சி மொழியாக ஏற்கத்தான் வேண்டும் என்று கூறுவேன்!

கண்ணன்: சீ!...வாயை மூடு விசுவம்! உனக்கு வெட்கமில்லை?...உன் அன்னையின் இடத்திலே இன்னொரு அரக்கியை ஏற்றுக் கொள்ள ஒப்புவாயா, நீ? அநியாயமாகப்பேசி என் ஆத்திரத்தைக் கிளப்பாதே!

விசுவம்: அன்னைக்கும் மொழிக்கும் என்னப்பா சம்பந்தம்?

கண்ணன்: பைத்தியமே! பெற்றவளைத் தாய் என்கிறாயே; பிறந்து வளர்ந்த பூமியைத் தாய்நாடு என்கிறாயே; அதைப்போல் பேசும் மொழியைத் 'தாய் மொழி' என்கிறோம்! புரிகிறதா? அன்னைக்கு நீ அளிக்கும் மாசு மருவற்ற மதிப்பை,பேசும் மொழியிடத்தும் வைக்க வேண்டும்! அதை உணராதவன்-உணர்ந்தும் உதறிவிட்டுப் பேசுபவன்—துரோகி! மாபெரும் துரோகி!

விசுவம்: என்ன?...கண்ணா ஏன் இப்படி கோபப்படுகிறாய்?

கண்ணன்: கோபம்—எனக்கு மட்டும் வரவில்லை விசுவம்! "ஏன் படிக்க வேண்டும் இந்தியை? எங்கள் தங்கத் தம்பிகளின் தலையிலே ஏன் அந்தப் பெரும் பளுவை— குப்பை மூட்டையைச் சுமத்துகிறீர்கள்?" என்று கேள்வி கு முறிக் கொண்டிருக்கும் தமிழ் உள்ளங்கள் அத்தனையும் கோபத்தால் கொக்கரித்து நிற்கின்றன விசுவம்!

விசுவம்: குப்பை மூட்டையா? இப்படிச் சொல்ல உனக்கு என்ன துணிவு கண்ணா!

கண்ணன்: உனக்குத் தெரியாது விசுவம்! இன்று பகட்டோடு பாய்ந்து வருகின்ற இந்தி மொழிக்கு ஏதப்பா இலக்கண எல்லை? இல்லையப்பா இலக்கியச் செல்வங்கள்! ஒரு திருக்குறள் வேண்டாம்; ஒரு சிலப்பதிகாரம் வேண்டாம்; ஒரே ஒரு ஒற்றை வரி ஆத்திச் சூடி கூட அதில் இல்லையே! அந்த மூளி மொழியை ஏற்றுக் கொண்டு, உலகத்திலே மூத்த மொழியாகிய நம் தேமதுரத் தமிழ் மொழியை உதறித் தள்ளுவோரை வேறு எப்படியப்பா விசுவம், அழைப்பது? துரோகி—அதைவிடக் கேவலமான பதம் வேறு தெரியவில்லையே எனக்கு! மொழிப்பற்று மறந்த மூர்க்கர்களை நம் தாயகம் மன்னிக்குமென்றா கருதுகிறாய்?



விசுவம்: மொழிப்பற்று — இந்தப் பதமெல்லாம் சொல்வதற்கும் எழுதுவதற்கும்தான் அழகாக இருக்கிறது! ஏட்டுச் சுரைக்காய் கறிக்காகுமா தம்பி?

கண்ணன்: நாடும், நல்லவர் நெஞ்சமும் போற்றும் மொழிப்பற்றைக் குறித்து கவிதை ஒன்று உண்டு! ஏட்டுச் சுரைக்காய் என்றாயே; அந்தச் சுரை சொல்லும் சுவையை — அந்தச் சுவை சொல்லும் சுந்தரக் கருத்தை-நான் சொல்லுகிறேன், கேள்! அயர்லாந்து என்று ஒரு நாடு உண்டே —தெரியுமா உனக்கு?

விசுவம்: பூகோளத்தில் நான் புலி என்பது புரியுமா உனக்கு? அயர்லாந்தையும் தெரியும்; அதன் பக்கத்திலே இருக்கும் இங்கிலாந்தையும் தெரியும்— மேலே சொல்!

கண்ணன்: சொல்லுகிறேன். அந்த அயர்லாந்து மக்கள் ஏழுநூறு ஆண்டுகளாகப் போராடிப் போராடி அலுத்துப்போனவர்கள்....

விசுவம்: என்ன போராட்டம் அது? உணவுப் போராட்டமா?

கண்ணன்: உயிர்ப் போராட்டம்கூட அல்ல; அதனினும் உயர்ந்த உரிமைப் போராட்டம்! அந்த நாட்டவர் தங்களை மிதித்துத் துவைக்கும் ஆங்கில ஏகாதிபத்தியத்தை வெறுத்தார்கள்! அந்த ஆதிக்கத்திற்கு ஒரே பக்க பலமான ஆங்கில மொழித் திணிப்பையும் எதிர்த்தார்கள்!

விசுவம்: அப்படியானால் அவர்களது தாய்மொழி என்னவாயிற்று?

கண்ணன்: தாய்மொழியான கேல் என்ற மொழி சிதைந்து கிடப்பதைக் கண்டு குமுறி எழுந்தார்கள்; 'மொழியை மறந்தவன் மிருகத்தினும் கேவலமானவன்' என்று வெட்கப்பட்டார்கள்! அப்படி வெட்கப் பட்டவர்கள் மானம்—மரியாதை உள்ள மனித இனம் மட்டுமல்ல நண்பனே!

விசுவம்: விளக்கமாகத்தான் சொல்லேன்!

கண்ணன்: சொல்லிக்கொண்டுதானே வருகிறேன்!...அந்தப் போராட்டம் நடந்து கொண்டிருந்த நேரத்தில் அயர்லாந்து சென்றானாம் ஒரு ஆங்கிலேயன்! அங்கே அழகான கிளி ஒன்றைப் பார்த்தானாம்; விலைக்கு வாங்கினானாம்; கூண்டிலடைத்தானாம்; கொண்டு வந்து விட்டானாம், இங்கிலாந்துக்கு!

விசுவம்: அப்படியானால் அயர்லாந்துக் கிளி இங்கிலாந்துக்கு வந்து விட்டது—அப்படித் தானே!

கண்ணன்: அப்படி முடிந்து விடவில்லையே, விசுவம்! அயர்லாந்திலே அது சுதந்திரக் கிளி—இங்கிலாந்திலே கூண்டுக் கிளி! அங்கே அது தினம் தினம் ஆயிரக்கணக்கானோரைச் சந்திக்கும்; அத்தனை பேரும் அதைக் கண்டு களிப்பர்—ஆனால் இங்கோ அது தனி ஒருவனுடைய மகிழ்ச்சிக்கான சிறைப் பறவை!

விசுவம்: இருந்தால் என்ன? அவன் என்ன, அதைப் பட்டினி போட்டுக் கொல்லவா பணம் கொடுத்து வாங்கி வந்தான்?

கண்ணன்: பட்டினி போடவில்லை! சுவைக்கும் பழம் கொடுத்தான்; நாவில் இனிப்பூட்டும் பால் கொடுத்தான்!

விசுவம்: அப்புறமென்ன? நேரம் தவறாது கிடைக்கும் உணவைப் புசித்து விட்டு 'ஹாயா'கக் காலத்தைக் கடத்த வேண்டியதுதானே! காட்டிலே கிடைக்குமா அந்த வாழ்வு?

கண்ணன்: அதுமட்டுமல்ல, விசுவம்! அவன் அதனிடம் கொஞ்சினான்: கெஞ்சினான்; அழகைக் கண்டு களித்தான்; பக்கத்திலேயே இருந்து பாதுகாத்தான், குழந்தைபோல! ஆனால்...

விசுவம்: என்ன ஆனால்?...அந்த சுகம் கிடைக்குமென்றால் நான்கூட கிளியாகப் பிறவி எடுத்து விடுவேனே! ஆனால் முடியாதே என்றுதான் வருந்துகிறேன்!

கண்ணன்: சொல்லுகிறேன் என்று கோபப்படாதே விசுவம்—உன்னைப் போல 'சாப்பாட்டு ராமன்'க இல்லையே அந்தக் கிளி!

விசுவம்: அப்படியானால்?...பட்டினியா கிடந்தது?

கண்ணன்: ஆமாம்! அந்த ஆங்கிலேயனின் கரங்கள் நீட்டிய பழத்தை அந்த அயர்லாந்துக் கிளியின் அலகு தீண்டவும் இல்லை; பாலைச் சுவைக்கவுமில்லை! அவன் கெஞ்சல்; கொஞ்சல்; குதூகலம்—எல்லாம் அந்தக் கிளிக்கு வேம்பாக இருந்தது விசுவம்!

விசுவம்: ஏன்?

கண்ணன்: சொல்லித்தான் தெரிய வேண்டுமா அதற்கான காரணம்? யோசித்துப் பார்! அந்தக் கிளி புகுந்த நாடோ,அது பிறந்து வளர்ந்த அயர் நாட்டை அடக்கியாளும் ஆங்கில நாடு! அதனினும் கொடுமை — திரும்பும் திசை எங்கும் அது கேட்கும் குரலோ, அதன் தாயகத்தை அடிமைப்படுத்திவரும் ஆங்கிலமொழி! அந்த ஆங்கிலக் குரல் செவிப்பறையைக் கிழிக்கும் காட்டுக் கூச்சலாக— கர்ண கொடூர கோரக் கதறலாக அந்த மொழிப் பற்று மிக்கக் கிளிக்குத் தோன்றியது! பாவம், அது ஏங்கித் தவித்தது, தன் தாயகத்து மொழி கேட்க! ஆமாம்; எங்கிருந்தாவது கேல் மொழியின் சொல் ஒன்றாவது காதில் விழாதா என்று ஏங்கித்தது! ஆனால், அதற்கிடையில் அதன் உடல் மிகவும் மெலிந்து கொண்டு வந்தது.

விசுவம்: பின்னே என்னவாம்! நீ தான் சொன்னாயே, அந்தக் கிளி பட்டினி கிடந்தது என்று!

[தொடர்ச்சி பக்கம்—10]

கண்ணன் ; அபிராமபுரம்

(?) நாஸ்திகனுக்கும் ஆஸ்திகனுக்கும் உள்ள வேற்றுமை என்ன ?

நாஸ்திகன் தன்னம்பிக்கை கொண்டவன் ; எதைச் செய்வதும் எது நேர்வதும் தன் செயலால்—தன் திறமையால்—தன் சிந்தனையால் என்று நினைப்பவன் !

ஆனால் ஆஸ்திகனோ தன்னம்பிக்கை அழிந்தவன். தான் எல்லாவற்றிற்கும் மேலான ஒரு சக்தியால் ஆட்டிவைக்கப்படும் பொம்மையே என்று கருதுபவன்; அதனால் தனது செயல்—திறமை—சிந்தனை அனைத்தும் சத்தற்றவை என்று நினைப்பவன் !

டாக்டர் மு. வ. எழுதியிருக்கிறபடி...எல்லோரும் நினைத்தவுடன் கடவுள் இல்லை என கண்மூடிச் சொல்லி விடுவதால் நாத்திகராக முடியாது. நாத்திகர்க்கு ஆராய்ச்சி வேண்டும் ; கடவுள் இல்லை என்ற தெளிவு வேண்டும்; இயற்கை என்றோ, பெர்னாட்ஷாபோல உயிராற்றல் என்றோ ஒன்றை நம்பும் நம்பிக்கையாவது வேண்டும்!

—அதனால் எல்லோரும் ஆஸ்திகராக இருந்துவிட முடியும் ; ஆனால் நெஞ்சத் துணிவு கொண்டவர்களால் மட்டும் தான் நிச்சயம் நாஸ்திகராக இருக்க முடியும் !

சித்தையன் ; அம்மாப்பேட்டை

(?) முத்துராமலிங்கத் தேவரைக் கைது செய்தது நியாயமா ?

யாரை; எப்போது காங்கிரஸ் துரைத்தனம் நியாயமாகக் கைது செய்திருக்கிறது ?

சிவஞானம் ; கானாடுகாத்தான்

(?) சட்டசபை இல்லாத நேரங்களில் அமைச்சர்களுடைய முக்கியமான வேலை என்ன ?

சுற்றுப்பயணம் செய்வது; 'பேட்டா' வாங்குவது!

சித்திரவேலு ;
மேலகற்கண்டார் கோட்டை

(?) கொட்டாவி விடுவது என்றால் என்ன ?

இப்போது திருவள்ளூர், பொன்னேரி பகுதிகளைப் பொறுத்தவரை காமராசர் செய்திருப்பதற்குப் பெயர்தான், அது!

## நீட்டோலை . . .

[7—ம் பக்கம் தொடர்ச்சி]

கேடு சூழ்வோரை விட்டு வைக்கப் போவதில்லை. இந்திக்குச் சிம்மாசனம் தரப் போவதில்லை.

படைவீரர் பட்டியல் வளரட்டும்—பாசறைகள் தயாராகட்டும் என்று நமது தலைவர் அண்ணா அறிவித்து விட்டார்!

வரும் பதின்மூன்றும் நாள் நாடெங்கும் போர் முன்னறிவிப்பு தினம் கொண்டாடப் படப்போகிறது; பொதுச் செயலாளர் அறிவிப்பின்படி!

போர் ! போர் ! வீட்டுக்கொரு வீரர் தேவை! தமிழ் காக்க—தமிழின் மானங்காக்க உடனே தயாராகிவிடுவீர் என்று தி.மு. கழகம் அழைப்பு விடுக்கிறது. நீயும் நானும்தான் என்றைக்கும், எதற்கும், இலட்சியத்திற்காக உயிர் தரவும் தயாராய் இருக்கிறோமே!

தலைவர் வழி காட்டுவார்! பொதுச் செயலாளர் போர்ப் பரணி பாடுவார் !

முதல் அறிவிப்பிலேயே பகை திரும்பிச் சென்றாக வேண்டும்- இல்லையேல் வந்ததை அனுபவிக்க வேண்டியதுதான்! பிற அடுத்த மடலில் !

அன்புள்ள,

நண்பன்

## ஞானசம்பந்தரே . . .

[9-ம் பக்கத் தொடர்ச்சி]

கழகத்தவர்களால் சட்டசபையில் பேசும்போது புள்ளி விபரங்களைக் காட்ட முடியவில்லையாம்!

அமைச்சரது மலிவுப் பதிப்பு விழா பேச்சைத்தான் எடுத்துக் கொள்வோமே!

"நமது பழம் பெரும் நூல்கள் பெரும்பாலும் தெய்வ பக்தியை அடிப்படையாகக் கொண்டவை!"

—பொதுவாகத்தான் பேசியிருக்கிறார், அமைச்சர்!

நமது பழம்பெரும் நூல்களில் எத்தனை நூல்கள் தெய்வ பக்தி கொண்டவை? இதிலே 'நட்ட கல்லைத் தெய்வமென்று நாலு புட்பம் சாத்தியே சுற்றி வந்து முணமுணத்து சொல்லும் மந்திரம் ஏதடா'—என்று பச்சை நாஸ்திகம் பேசும் பாக்கள் சேர்ந்திருக்கின்றனவா?

அமைச்சரது பேச்சிலே அந்தப் புள்ளி விபரம் இல்லை!

'பெரும்பாலும்' —என்ற பொதுப்படையான வார்த்தை தான் காணக் கிடைக்கிறது.

அய்யா, புள்ளிவிபரமோகியே! ஏன் உமது பேச்சிலே புள்ளி விபரமில்லை? — இப்படியும் கேட்க முடியும் நம்மால்! மேடைகளிலெல்லாம் ஒலித்துக் காட்ட முடியும்!

—ஆனால் இது முறையல்ல! வாயைத் திறப்பது முதல்; வாயை மூடுவதுவரை வெளி வருகிற அனைத்திற்கும் புள்ளி விபரம் தேவை என்றால் அமைச்சர் குறிப்பிடுகிற அந்தப் புள்ளி விபரங்கள் சரியான புள்ளி விபரங்களாக இருக்குமென்று எதிர்பார்க்க முடியாது; அவை கான கற்பனைகளாகத்தான் இருக்க முடியும்!

ஒரு சிலவற்றிற்கு புள்ளி விபரம் தேவைதான்!

—ஆனால் அந்த நேரங்களிலெல்லாம் கழக உறுப்பினர்கள் போதுமான புள்ளி விபரம் காட்டத் தவறியிருக்கிறார்களா?

இல்லையே! நமது புள்ளி விபரம் கேட்டு அமைச்சர் கக்கன் பதில் சொல்ல முடியாமல் திகைத்தல்லவோ உட்கார்ந்திருக்கிறார் !

பாவம்; மிதவை சிறிது அசைந்தாலும் தூண்டிலிலே மீன் சிக்கி விட்டதாக நினைக்கும் பான்மைபோல் நாஸ்திகர்களைத் தாக்குவதால் தி. மு. கழகத்தைத் தாக்குவதாக நினைத்துக் கொண்டு பேசியிருக்கிறார் அமைச்சர் !

"கடவுள் இல்லையென்று வாதிக்கின்றவர்கள், இன்றைய நிலையில் உண்மையில் தமிழ் மொழி வளர்வதற்குத் தடையாகவே இருக்கின்றனர் என்று கருதுகின்றேன் !

—அமைச்சரது வாசகம்இது; 'மித்திரன்' இதழில் வந்திருப்பது!

கடவுள் இல்லையென்று வாதிக்கிறவர்கள் இன்றைய நிலையில் தமிழ்மொழிவளர்வதற்குத் தடையாக இருக்கிறார்களாம்!

அப்படியானால் அமைச்சரே! பிறகு என்றைய நிலையில் கடவுள் இல்லையென்று வாதிக்கிறவர்கள் தமிழ்மொழி வளர்வதற்குத் தடையாக இல்லாமல் இருந்திருக்கிறார்கள் ?

—நமது சட்டசபைப் பேச்சிலே விளக்கம் இல்லை என்று கூறுபவர் இந்தப் பேச்சிலே இதற்கு விளக்கம் தரவில்லை.

'நாஸ்திகர்களினால் தமிழ் வளர்ச்சிக்குத் தடையே'— அமைச்சர் பேச்சுக்கு 'மித்திரன்' தலைப்பு இது!

'நாஸ்திகர்' என்பதன் மூலம் அமைச்சர் தி. மு. கழகத்தவர்களைக் குறிப்பிடுவாரேயானால் அவருக்குச் சொல்லிக் கொள்ள ஆசைப்படுகிறோம்— அன்புள்ள அமைச்சர் அவர்களே! ஒரு அறிஞர் அண்ணா தமிழ் நாட்டில் பிறந்திருக்கா விட்டால் இன்று தமிழ் மொழியிலே 'மறுமலர்ச்சி' என்ற வார்த்தைக்கே அர்த்தம் இல்லாமல் போயிருக்கும்; 'அம்மாமி மொழி' அரியணையிலே வீற்றிருக்கும்! அவர்தான் புலவர்கள் மட்டுமே புரிந்து கொள்ள முடியும் என்று கருதப்பட்ட அர்த்தம் நிறைந்த அழகான சொல்லடுக்குகளை பாமரர்களும் புரிந்துகொண்டு உபயோகிக்க முடியும் என்று செயற்படுத்திக் காட்டியவர்! அவர்தான் அகத்தையும் புறத்தையும்; குறளையும் சிலம்பையும் 'மலிவுப்பதிப்பினும்' மலிவாக்கி தமிழர் உள்ளங்களிலே நடமாட விட்டவர் !

—அமைச்சரே, அமைச்சரே! அர்த்தம் நிறைந்த அடுக்குச் சொல் விரோதியே! புள்ளி விபரக் காமியே! அடுத்த முறை தி. மு. கழகத்தைத் தாக்குவதற்கு முன்னர் இதைத் தயவு செய்து புரிந்துகொள்ள முயற்சி செய்யுங்கள் !

-மாறன், எம். ஏ.


அக்டோபர் இதழ் 10-ம் நாள் கிடைக்கும் !

தென்னகத்து வீதிதோறும் தமிழ் முழக்கம் செய்துவரும் திங்கள் ஏடு !

★

ஈடிணையற்ற இலக்கிய முத்துக்கள் சேர்த்துக் கோர்த்த

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரை

புலவர் குழந்தை

நாஞ்சில் மனோகரன்

—மற்றும் எழுத்துலக வேந்தர்கள் பலரின் உயிரோவியங்கள் !

★

காதல் போதாது—மானத்தின் மாண்பு சொல்லும் மராட்டியக் கதை !

உழைப்பு— அதற்குள்ள சிறப்பு விளக்கும் இந்திக் கதை !

பெண் மனம்—தாய்க் குலத்தின் தூய நெஞ்சிலே சூது பாய்ச்சும் கொடியோரைச் சுட்டிக் காட்டும் பிரெஞ்சுக் கதை !

இந்தக் கதைகளோடு கவிதைநடைச் சிறுகதை—

ஆசிரியர் மு. க. வின் வழக்கமான விருந்து !


ஆசிரியரும், அச்சிடுபவரும் வெளியிடுபவரும் மு. கருணாநிதி, 'முரசொலி' அச்சகம், 4-128, மவுண்ட்ரோடு, சென்னை-6. தமிழ்நாடு